Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-26 | 11-12-2004 | சனிக்கிழமை | ஓசை -297

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10932)

# யுத்தத்திற்கான ஆயத்தங்களைச் செய்வதிலேயே

# அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(அலுவலகசெய்தியாளர்)

**தமிழ் மக்களின் கோரிக்கையை அரசு கொச்சைப்படுத்தும் வகையிலும் பேச்சுக்களை நிறுத்தும் வகையிலும் மீண்டும் யுத்தத்திற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதிலுமே முழுமையான அளவில் தீவிரமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வில் உரையாற்றும் போது தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

இதன் போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; தமிழர் தாயகப் பகுதியிலே மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுவதையிட்டு நாங்கள் பெருமையும் மனநிறைவையும், அடைகின்றோம். இந்த மனித உரிமைகள் தினத்தை கொண்டாடும் உரித்தும் உரிமையும் உடையவர்களாக நாங்கள் இருக்கின்றோம். ஏனெனில் எங்களுடைய விடுதலைப் போராட்டம் அந்த மனித உரிமைகளின் விழுமியங்களின் அடிப்படையிலேதான் தோற்றம் பெற்றது. எப்பொழுது எங்களுடைய (12ஆம் பக்கம் பார்க்க)




# கிளி.யில் சிறப்புற நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வுகள்

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச மனித உரிமைகள் தினம் கிளிநொச்சியில் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டுள்ளது.

வடகிழக்கு மனிதஉரிமைகள் செயலகம் அமைந்துள்ள கிளிநொச்சிப் பிரதேசத்தில் மேற்படி மனித உரிமைகள் தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மனித உரிமைகள் செயலக இயக்குனர் வணபிதா மரியாம்பிள்ளை கருணாரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் ஆரம்பாக நிகழ்வாக மங்கல விளக்கினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ், சமாதானப் பேரவையைச் சேர்ந்த கார்த்திகேயன், மனித உரிமைகள் செயலகத்தின் தென்பகுதிப் பிரதிநிதி சந்திரநேரு ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து வரவேற்புரையினை சட்டத்தரணி சிவபாலன் நிகழ்த்தினார். தலைமையுரையினை அடுத்து தென்பகுதி மனிதஉரிமைகள் செயலக பிரதிநிதி சந்திரநேரு அவர்களின் கருத்துரை இடம (12ஆம் பக்கம் பார்க்க)

## தினக்குரல் அலுவலகம் மீது 2 ஆவது தடவை கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு அரசடியிலுள்ள தினக்குரல் பத்திரிகையின் பிராந்திய அலுவலகம் மீது நேற்று நண்பகலும் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

அலுவலக ஊழியர்கள் வழமையான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் அங்குவந்த இனந்தெரியாத நபரொருவர் இந்தக் கைக்குண்டை வீசி விட்டு உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளார். வீசப்பட்ட கைக்குண்டு முன்பக்கக் கண்ணாடியை உடைத்து உள்ளே சென்று வீழ்ந்த போதிலும் அது வெடிக்கவில்லை. இதனை அடுத்துப் பொலிசார் அங்கு விரைந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மனித உரிமைகள் செயலகம் முன்பாக

# படையினரால் கைதாகிக் காணாமற்போனோரின் நலன் வேண்டி தீபம் ஏற்றிப் பிரார்த்தனை!

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று 1996, 97ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன தமிழ் இளைஞர், யுவதிகளது நலன்வேண்டி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக தீபம் ஏற்றி பிராத்தனைகள் இடம்பெற்றுள்ளன. யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியின் ஏற்பாட்டில் காலை முதல் மாலை வரை இடம்பெற்ற இப் பிராத்தனையில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாகப் படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த இளைஞர், யுவதிகளில் எவராயினும் படைத்தளங்களிலோ அல்லது தடுப்பு முகாம்களிலோ தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர் களை உடனடியாக நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு தாம் கோரிக்கை விடு வதாக பிரார்த்தனையில் ஈடுபட்ட அன்னையர் முன்னணிப்பிரதிநிதிகள் அறிவித்திருந்தனர். இதேவேளை காணாமற்போன தமிழ், இளைஞர், யுவதிகள் தொடர்பான தீர்வொன்றைக் காண்பதற்கேதுவாக (12ஆம் பக்கம் பார்க்க)



## எஸ்.பி திசாநாயக்கவை ரணில் சிறையில் சென்று பார்வையிட்டார்

### மனைவி,மகன்மாருக்கு அனுமதி மறுப்பு

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று வெலிக்கடைச் சிறையில் எஸ்.பி.திஸாநாயக்கவைப் பார்வையிட்டார். சிறை அதிகாரிகளின் அனுமதியைப் பெற்று நண்பகல் 12 மணியளவில் வெலிக்கடைச் சிறைக்குச் சென்ற ரணில், அங்கு தனிக்கூண்டில் சிறை வைக்கப்பட்டுள்ள எஸ்.பி.திசாநாயக்கவைச் சந்தித்துப்பேசினார். இதேவேளை, நேற்று முன்தினம் வெலிக்கடைச் சிறைக்குச் சென்ற எஸ்.பி.திஸாநாயக்கவின் மனைவி தாமர திஸநாயக்க மற்றும் மகன்மாரை சிறைச்சாலைக்குள்ளேயே சிறைச்சலை அதிகாரிகள் விடவில்லை. வாசலில் வைத்துத்திருப்பி அனுப்பிவிட்டார்கள். இவர்கள் வந்திருப்பதை தொலைபேசியூடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் (12ஆம் பக்கம் பார்க்க)

## அறிஞர் சொக்கன் நேற்றுக் காலமானார்



ஈழத்து இலக்கிய உலகில் சொக்கன் என்றபுனை பெயரில் அழைக்கப்பட்டு வந்த மூத்த அறிஞர் கந்தப்புசெட்டியார் சொக்கலிங்கம் தனது 77ஆவது வயதினில் நேற்று யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தியுள்ளார்.

நல்லூர் நாயன்மார்கட்டுப் பகுதியிலுள்ள தனது கிராமத்தில் தனது மரணம் வரையான காலப் பகுதியில் வசித்து வந்திருந்த சொக்கன், தமிழீழ மாணவர்களது கல்வியை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள "தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின்" ஆலோசகர்களுள் ஒருவராகவும் பங்காற்றி வந்திருந்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

09.06.1991 அன்று சிறிலங்கா கடற்படையினரின் தாக்குத்லில் நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் சந்திரன் (சுந்தரலிங்கம் சந்திரலிங்கம் வல்வெட்டித்துறை யாழ்ப்பாணம்) என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.

15.09.1995 அன்று சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

வேழன் பதிப்பகம் உங்கள் சகல விதமான அச்சக வேலைகளையும் கணினி மூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம். கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5284)

### தவறிவிட்டது

கந்தசாமி சுரேஸ்கரன் இல:11 புதுக்காடு இராமநாதபுரத்தைச் சேர்ந்த எனது அஞ்சல் அடையாள அட்டையும் க.பொ.த சாதாரண பரீட்சைக்குக் காசு கட்டிய பற்றுச்சீட்டும் அடங்கிய நீல நிறப்பொலித்தீன் பேக்குடன் கிளிநொச்சி கல்விப் பணிமனைக்கும் கிளிநொச்சி பேருந்து நிலையத்திற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் கிளி/பணிமனையில் ஒப்படைக்கவும். தகவல்.க.சுரேஸ்கரன்.(5344)

**2005 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

விசேட புலமைப்பரிசில் வகுப்பு, தரம் 6-11 வரையான வகுப்புக்கள் என்பன 10.12.2004 மாலை 3.00 மணிக்கு கேம்பிறிஜ் கல்லூரி (C,B,I) .புகையிரத நிலையம் முன்பாக வவுனியாவில் ஆரம்பமாகிறது. நிர்வாகி. (4945)

### கருத்தரங்கு

இன்று காலை 8.30 மணிக்கு கிளி/மத்திய கல்லூரி தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்.இரசாயனவியல் ஆசிரியர் அன்பழகன் அவர்களால் இரசாயனவியல் கருத்தரங்கு நடாத்தப்படுகின்றது. 2005 ஆண்டு க.பொ. உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்காக விசேடமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. எனவே இக் கருத் தரங்கில் கலந்து கொண்டு பயனடையுமாறு மேற்படி மாணவர் கேட்கப்பட்டுள்ளனர். •

### பாடசாலை மாணவர்களுக்கான விசேட கணினிப் பயிற்சி

பாடசாலை விடுமுறை காலத்தில் தரம் 7-11 வரையான மாணவர்கள் அடிப்படைக் கணினிக் கல்வியை பெற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்ட குறுகிய கால கணினிப் பயிற்சிநெறி.

ஆரம்பம்:12.12.2004 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:4.00 மணி
பாடநெறிகள்:- *WINDOWS XP. *MS WORD
*POWER POINT

குறிப்பு:- குறுகிய காலத்தில் குறைந்த மாணவர்களை பயிற்றுவிப்பதால் உடனடியாக அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**பி.எஸ்.ரி தொழில்நுட்பம்**
**கச்சேரி அருகாமை**
**கிளிநொச்சி**

(5345)

# கேள்வி அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்வரும் மாதங்களுக்கு உலர் உணவு விநியோகம் மேற்கொள்ளத் தேவையான நாட்டுப் புழுங்கல் அரிசி, முதல் தரமான (கிறீன் பிராண்ட்) கோதுமை மா என்ப வற்றை வழங்கக்கூடிய பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங் கங்களிடமிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப் படுகின்றன.**

| மாதம் | நாட்டுப் புழுங்கல் அரிசி | கோதுமை மா |
|---|---|---|
| 2005 சனவரி | 530 மெ. தொன் | 25 மெ. தொன் |
| 2005 பெப்ரவரி | 530 " | 25 " |
| 2005 மார்ச் | 530 " | 25 |

இதற்கான கேள்விப் படிவத்தினையும், ஆவணங்களையும் 28-12-2004 வரை அலுவலக நேரத்தில் மாவட்ட புனர்வாழ்வுச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி. இராசநாயகம்,**
அரச அதிபரும்,
மாவட்ட கேள்விச் சபைத் தலைவரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-10959)

# முக்கிய அறிவித்தல்

**மேற்படி பூநகரிப் பகுதியில் பின்வரும் திகதிகளில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது. என்பதை அப்பகுதி பொது மக்களுக்கு அறியத்தருவதுடன் தடுப்பூசி மருந்து ஏற்றப்படாது தகடு பெறப்படாத நாய்கள் கட்டாக்காலி நாய்களாக கருதப்பட்டு அழிக்கப்படும் என்பதையும் தங்கள் கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.**

| திகதி | இடம் |
|---|---|
| 14.12.2004 | சாமிப்புலம் |
| 15.12.2004 | நல்லூர் |
| 16.12.2004 | ஆலங்கேணி |
| 17.12.2004 | தம்பிராய் |

**ஒப்பம்:க.தனபாலசிங்கம்**
**விசேட ஆணையாளர்,**
**பிரதேசபை**
**பூநகரி.**

(சி.10961)

**மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு**
**வடக்கு-கிழக்கு மாகாண சபை**

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**
**"ஆஅவ" கடன் இல:- 2043 SRI (SF)**
**(பகுதி C-சமுதாய மீளமைப்பும் அபிவிருத்தியும்)**

# கேள்வி அறிவித்தல் - 04

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01) போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்தக் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02) இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் (CAARP), கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொ. இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | கேள்வியின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கேஎன்/ கார்ப்/ஈடி/11 | கிளி/ கறுக்காய்த் தீவு அ.த.க பாடசாலையில் 110 'x25' இரு மாடி வகுப்பறைக் கட்டடம் மீள் நிர்மாணம் | எம்7 | 43,000/= |
| 02 | கேஎன்/கார்ப்/ எச்எஸ்/03 | பூநகரியில் சித்த ஆயுள்வேத வைத்தியசாலை கட்டட மீள் நிர்மாணம். | எம்7 | 22,000/= |
| 03 | கேஎன்/ கார்ப்/ ஆர்டி/02 | செம்மன்குன்று-பாலாவி-கிராஞ்சி வீதி (5கி.மீ) புனரமைப்பு. | எம்6 | 78,000/= |

03) பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கேள்விகள் திறந்துள்ளது.

I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் 2003 யூலை முதலாம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவு செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது. இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தகாரர்களாக அல்லது உப ஒப்பந்தகாரர்களாகச் செய்திருத்தல் வேண்டும். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/ அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும், முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

III) இக்டாட் வழிகாட்டல் முறையின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதிய கேள்வி கோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

IV)மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

V) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04) மேற்படி பந்தி இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்விகள் கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை"கார்ப்" திட்டத்தின் கீழ் நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும். அல்லது 2003 யூலை முதலாம் திகதிக்கு பின்பு தங்களைப் பதிவு .செய்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்கள் இது போன்ற வேலைகள் அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ, அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ செய்திருந்தால் "கார்ப்" திட்டத்தின் கீழ் ஒரு நேரத்தில் ஆகக் கூடுதலாக பெற்றுக்கொள்ளக் கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

05) ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களைக் கேள்விப்படிவத்தில் இருந்து பெறமுடியும். என்பதுடன் கேள்வி ஆவணங்களை வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்) மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்திலுள்ள மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06) கேள்வி ஆவணங்களை 2004 டிசம்பர் மாதம் 13 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி வரை காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 1000 ஐ (கேள்வி ஆவணம் ஒன்றிற்கு) செலுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

07) கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு I வாசகம் II குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணங்களை இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

08) அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் உரிய பிணைப்பணத்துடன் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, நிகொட் கருத்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2004 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக் கலாம்.

09) கேள்வி சம்பந்தப்பட்ட கூட்டமொன்று டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு கிளிநொச்சி கச்சேரியில் நடைபெறும்.

10) கேள்வி தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**தி.இராசநாயகம்,**
**தலைவர், மாவட்ட கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-10960)

# ஜப்பான் வருகை தரும் வெளிநாட்டினர்கள் விடயத்தில் எச்சரிக்கையுடனிருக்க முடிவு!

**புதிய திட்டத்திற்கு அரசு அங்கீகாரம்**

(டோக்கியோ)

**ஜப்பானிய அரசாங்கம் பயங்கரவாதத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக நாட்டிற்கு வரும் வெளிநாட்டவர்களின் கைவிரல் அடையாளங்களையும், புகைப்படங்களையும் அதிகாரிகள் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி அளிக்கும் திட்டமொன்றை நேற்று முதல் அங்கீகரித்துள்ளது.**


அதிகாரிகளிடம் தமது பயணிகளின் பட்டியலை விமான ஓட்டிகளும், கப்பல் கப்டன்களும் சமர்ப்பிக்கும் படி கோருவது இந்த திட்டத்தின் ஒரு அம்சமாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஹோட்டல்களில் வெளிநாட்டவர்கள் சென்று தங்கும் போதும் அவர்களது பெயர், கடவுச்சீட்டு இலக்கம் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதும் கட்டாய சேவையாக்கப்படும்.

2006 ஆம் ஆண்டளவில் அரசாங்கம் இந்த நிபந்தனைகளைப் பாராளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு சமர்ப்பிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



வடக்கு ஈராக் நகரான மொசூலில் கார்க் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த அமெரிக்க வீரரை ஏற்றிச் செல்லும் கம்வி வாகனத்துக்கு சக படையினர் வழி காட்டுகின்றனர்.



ஈராக்கின் பஸ்ராவில் கடமையில் ஈடுபட்டுள்ள பிரித்தானியப் படைவீரர்

# உலகில் ஆண்டுதோறும் பட்டினியால் 50 இலட்சம் குழந்தைகள் இறப்பு!

**ஐ.நா.ஆய்வின் தகவல்**

(வோஷிங்டன்)

ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் பட்டினிக் கொடுமையால் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை உலகில் ஆண்டுதோறும் 50 இலட்சத்துக்கும் அதிகமாக உள்ளது. இத்தகவலை ஐநா. உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையால் வளரும் நாடுகளே அதிகம் பாதிக்கப்படுகின்றன. ஊட்டச்சத்துப் பற்றாக் குறைமிக்க குழந்தைகளால் தேசிய உற்பத்தித்திறனும் வருவாய் இழப்பும் ஏற்படுகின்றன. இதனால் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

வளரும் நாடுகளில் ஆண்டு தோறும் எடை குறைவாகப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 2 கோடியாக உள்ளது. இதில் சிலர் பிறந்த சில நாட்களிலேயே இறந்து விடுகின்றனர். இந்த குறைபாடுகளிலிருந்து காப்பாற்றப்பட்டு வளரும் குழந்தைகள் ஊட்டச்சத்துக குறைவு பாதிப்பினால் தங்கள் வாழ்நாள் முழுவதும் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். 2000-2002 ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி உலகம் முழுவதும் 82 கோடி குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் வளரும் நாடுகளில் மட்டும் 80 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் உள்ளனர். இந்தியாவில மட்டும் 1.8 கோடி குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.



பீஜிங்கில் இராணுவ உபகரணங்கள் விற்பனை செய்யும் ஒரு களஞ்சியத்தின் வெளியே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த மனிதரளவு உயரமான அமெரிக்க இராணுவ வீரரின் மாதிரியைச் சீனப் பிரஜை பார்வையிடுகிறார்

# இராணுவ செலவீனத்தைக் குறைக்க ஜப்பானிய அரசு முயற்சி

(டோக்கியோ)

இராணுவச் செலவை அடுத்த ஐந்து ஆண்டுகளில் படிப்படியாகக் குறைக்க ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளது.

ஜப்பானில் இராணுவத்துக்காகச் செலவிடப்படும் தொகை அதிகமாக உள்ளது. தற்போது செலவிடப்படும் தொகையில் 3.7 சத வீதத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் குறைக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. அதாவது, இராணுவத்துக்காக செலவிடப்படும தொகையில 20 லட்சத்து 98 ஆயிரம் கோடி ரூபாவை அடுத்த ஐந்து ஆண்டுகளில் குறைக்க திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆண்டு இராணுவச் செலவில் ஒரு சதவீதம் இந்த ஆண்டில் குறைக்கப்படும். இதற்கேற்ப புதிய இராணுவக் கொள்கையை ஜப்பான் அரசு வெளியிட்டுள்ளது.

# பலஸ்தீன சனாதிபதி வேட்பாளர் மீது இஸ்ரேலிய இராணுவம் தாக்குதல்

பலஸ்தீன சனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான பர்கவுத்தி இஸ்ரேல் இராணுவத்தால் தாக்கப்பட்டார் அத்துடன் அவரைக் கைது செய்து அவர்கள் இழுத்துச் சென்றனர். பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து புதிய சனாதிபதியைத் தேர்ந்து எடுப்பதற்காக வருகிற சனவரி 09 ஆம் திகதி தேர்தல் நடக்கிறது.

இந்தத் தேர்தலில் பலஸ்தீன விடுதலை இயக்கம் முன்னாள் பிரதமர் மக்மூத் அப்பாசை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. அவரை எதிர்த்து அதே இயக்கத்தைச் சேர்ந்த முஸ்தபா பர்கவுத்தியும் வேட்பாளராகப் போட்டியிடுகிறார். இந்த இருவர் தவிர மேலும் 9 பேரும் களத்தில் இருக்கிறார்கள்

பர்கவுத்திக்கு இஸ்ரேல் நீதிமன்றம் 5 ஆயுள் தண்டனைகளை விதித்துள்ளது. இதற்காக இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்காக அவர் பிணையில் வெளியே வந்தார். மேற்குக் கரைப்பகுதியில் அவர் பிரச்சாரம் செய்தார். ஜெனின் என்ற இடத்தில் ஆதரவாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு ரமல்லாவில் உள்ள வீட்டுக்கு காரில் புறப்பட்டார்.

இஸ்ரேல் இராணுவ சோதனைச் சாவடி அருகே அவர் காரில் சென்றபோது அவரை இராணுவ வீரர்கள் வெளியே இழுத்துப் போட்டு அடித்து உதைத்தனர். பிறகு அவரைக் கைது செய்தனர்.

இந்தத் தகவலை அவரது உதவியாளர் நசீர் பலே, தொலைபேசி மூலம் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார். இது பற்றி இஸ்ரேல் இராணுவம் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

# பலஸ்தீன நிர்வாக சபைக்கு நிபந்தனையுடன் நிதியுதவி

**-அமெரிக்கா அறிவிப்பு**

(வோஷிங்டன்)

பலஸ்தீன நிர்வாக சபைக்கு அமெரிக்கா 200 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கிறது. இந்த உதவியைப் பெறுவதற்கு புஷ் நிபந்தனை விதித்து இருக்கிறார்.

இஸ்ரேல் கம்பெனிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய தொகைகளுக்கு மட்டுமே உதவிப்பணத்தைப் பயன்படுத்த வேண்டும்.

பலஸ்தீன சனாதிபதித் தேர்தல் செலவுகளுக்கு நேரடியாக உதவ மறுத்துவிட்ட புஷ் இப்படி பயன்பாட்டுக்கான செலவுத் தொகைக்கு பணம் தர ஒப்புக்கொண்டு இருக்கிறார். இதனால் நிர்வாகசபை பயன்பாட்டுக்கான செலவுத் தொகைக்காக வைத்திருந்த பணத்தை தேர்தலுக்கு ஒதுக்க முடியும்.

4 ஆண்டுகளாக நடந்து வரும் வன்முறைச் சம்பவங்களால் வரி வருவாய் கணிசமாகக் குறைந்து உள்ளது. இதனால் பலஸ்தீனப் பொருளாதாரம் சீர்குலைந்து போய்விட்டது.

# மியன்மாரில் உலக புத்தமத மாநாடு ஆயிரம் துறவிகள் பங்கேற்பு

(ரங்கூன்)

மியன்மார் நாட்டில், உலக புத்த மத மாநாடு நேற்று முன் தினம் தொடங்கியது. 3 நாட்கள் நடக்கும் இந்த மாநாட்டில் ஆயிரம் புத்த துறவிகள் கலந்து கொள்கின்றனர்.

தலைநகர் ரங்கூனில் ஒரு மண்டபத்தில் செயற்கையாக ஒரு குகையை உருவாக்கி அதில் இந்த மாநாடு நடைபெற்று வருகிறது.

மாநாட்டை மியன்மார் பிரதமர் லெப்டினன்ட் ஜெனரல் சோவின் தொடக்கி வைத்தார். அப்போது அவர் தொடக்கிவைப்பதற்கு எதிர்ப்புக் கிளம்பி யது. 300 புத்த துறவிகளை கைது செய்து சிறையில் அடைத்து இருக்கும் இராணுவ ஆட்சியின் பிரதிநிதி தொடக்கி வைக்கக் கூடாது என்று எதிர்ப்பாளர்கள் கூறினர்.

# இசை நிகழ்ச்சியில் தாக்குதல் ஐவர் பலி; இருவர் படுகாயம்!

**-துப்பாக்கிதாரியும் தாக்குதலில் பலி**

(வோசிங்டன்)

அமெரிக்காவில் ஓஹியோ மாநிலம் கொலம்பஸ் நகரில் "ஹெவி மெட்டல் பாண்டு:" இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்தது. இதில் 300 இற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது ஒரு மர்ம மனிதன் மேடைக்கு வந்து துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டதில் இதில் இசைக்குழுவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 5 பேர் பலியானார்கள். 2 பேர் காயமடைந்தனர். இது பற்றி உடனே பொலிசிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிசார் மர்ம மனிதனைச் சுட்டுக் கொன்றனர். மர்ம மனிதன் எதற்காகத் துப்பாக்கியால் சுட்டார் என்பது தெரிய வில்லை.



வடகிழக்குப் பிலிப்பைன்ஸ்சில் மண் சரிவினால் அழிவடைந்த இரண்டு மாடிக் கட்டடச் சிதைவுகளின் துவாரம் ஒன்றினூடாக ஒரு சுரங்கத் தொழிலாளி பார்க்கின்றார். இச்சிதைவுகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் மூன்று சிதைவடைந்த உடல்களையே கண்டு பிடிக்க முடிந்தது.

# விளக்கு சஞ்சிகையின் எழுத்தாக்க போட்டி முடிவுகள் வெளியாகின

2004 ஆம் ஆண்டு உலக ஆசிரியர் நாளையொட்டி தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவையின் வெளியீடாகிய விளக்கு நடாத்திய தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் போட்டியில் பரிசில்கள் பெறுவோர் விபரம்.

கட்டுரை எழுதுதல: முதலாமிடம் மு.மோகனேந்திரன் ஈச்சந்தீவு, விபுலாநந்த வித்தியாலயம், திருகோணமலை. பரிசுத்தொகை ரூபா10000.00.

இரண்டாம் இடம்:-கே. ஞானரெத்தினம் சிவானந்த வித்தியாலயம், கல்லடி உப்போடை, மட்டக்களப்பு. பரிசுத்தாகை ரூபா7500.00.

மூன்றாமிடம்:-கோகுலவாணி தேவராஜா மல்லாவி மத்திய கல்லூரி,மல்லாவி.பரிசுத்தொகை ரூபா 5000.00.

**சிறுகதை ஆக்கம்:** முதலாமிடம்:- யோசெப் ஆரோக்கியம் குரூஸ் மடுவலயக் கல்விப் பணிமனை, ஆண்டான்குளம். பரிசுத்தொகை ரூபா 10000.00

இரண்டாம் இடம்:-மு. இராசநாயகம் கனகரத்தினம் மத்திய ம காவித்தியாலயம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பரிசுத்தொகை 7500.00.

மூன்றாமிடம் இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம், முகாமைத்துவ உதவியாளர், கண்டாவளை கல்விக்கோட்டம், கிளிநொச்சி. பரிசுத்தொகை ரூபா 5000.00.

**கவிதை ஆக்கம் :** முதலாமிடம்:- எம்.வீ எ.ஃப் ஸ"ல்.ஃபிகா ஹொ/அல் கஸ்ஸாலி மத்திய கல்லூரி, அட்டுலுகம, பண்டாரகம. பரிசுத்தொகை 5000.00.

இரண்டாம் இடம் அருட்சகோதரி ஞா.இமெல்டா சுபாஜினி தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா. பரிசுத்தொகை ரூபா 3000.00.

மூன்றாமிடம்:- இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம் முகாமைத்துவ உதவியாளர்,கண்டாவளை கல்விக் கோட்டம் கிளிநொச்சி. பரிசுத்தொகை ரூபா 2000.00.

**விமர்சனம் எழுதுதல்:** முதலாமிடம்:- கா. சசிதரன் யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி. பரிசுத்தொகை ரூபா 5000.00.

மேற்படி போட்டி முடிவுகள் யாவும் ஆக்கப் பரிசீலனைக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டவையாகும்.

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் யாவும் 2005 சனவரி மாதத்தில் வழங்கி கௌரவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

# வீடமைப்புத்திட்ட அடிக்கல் நாட்டல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பாரதிபுரம் கிராம வீடமைப்புத்திட்ட அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சார்ந்த க.ரவிகாந் தலைமையில் நடைபெற்ற மேற்படி அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மங்கல விளக்கினை த.பு.கழக நிகொட் திட்டப்பணிப்பாளர் சுடர், கிராம சேவை அலுவலர் வைரவநாதன் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியினை கிளிநொச்சி பொருளாதார அபிவிருத்திச்சங்கத் தலைவர் பொ.இராமலிங்கம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வீடமைப்புத்திட்டத்தின் முதலாவது வீட்டிற்கான அடிக்கல்லினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப்பணிப்பாளர் வின்சன் மற்றும் இரண்டாவது வீட்டிற்கான அடிக்கல்லினை கிளிநொச்சி மாவட்ட நிகொட் நிறுவன பிரதித் திட்டப்பணிப்பாளர் க. பார்த்தீபன் ஆகியோர் நாட்டிவைத்து வீட்டுத்திட்ட கட்டட வேலையினை ஆரம்பித்து வைத்தனர். (சோ)





பூநகரி வாடியடியில் இருந்து சங்குப்பிட்டி செல்லும் வீதியில் கணவாய் பள்ளம் பகுதியில் வீதியில் உள்ள நீர்போக்கி பழுதடைந்துள்ளதை முதலாவது படத்திலும், கனகபுரம் டிப்போவீதியின் அருகாமையில் நீர் வழங்கல் அதிகாரசபையினரால் மேற்கொள்ளப்பெற்ற வேலைத்திட்டங்கள் பூர்த்தியான நிலையிலுள்ள பகுதியில் உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியொன்று புதையுண்டிருப்பதனை இரண்டாவது படத்திலும், தொடர் மழையால் நிலம்ஊற்றெடுத்து ஜெயந்திநகரில் வீட்டின்சுவர்கள் வீழ்ந்துள்ளதை மூன்றாவது படத்திலும் காணலாம். (34,சோ)

# மழை காலத்தில் சுகாதார விழிப்புணர்வுடன் செயற்பட த.சு.சேவையினர் அறிவுறுத்து

(முள்ளியவளை )

தற்போது ஏற்பட்டுள்ள தொடர்மழை காலத்தில் மிகமிக சுகாதார விழிப்புணர்வுடன் வெதுப்பக நிலையத்தினரும் உணவகத்தினரும் செயற்படுமாறு முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

வெதுப்பகங்களில் இருந்து வெதுப்பிகளை வர்த்தக நிலையங்களுக்குக் கொண்டு சென்று பரிமாறும் போது சுகாதார முறைப்படியும் வெதுப்பகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுகாதார வரையறைக் கட்டுப்பாட்டுடன் செயற்படுமாறும் கேட்கப்பட்டுள்ளதுடன் வெதுப்பிகளை வர்த்தக நிலையங்களுக்கு பரிமாறும் போது சுகாதார பாதுகாப்பற்ற நிலையில் சுகாதார சீர்கேடாக காணப்படும் பட்சத்தில் அவ் வெதுப்பிகள் அழிக்கப்படுவதுடன் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# த.பு.கழகம், ஐ.ஓ.எம் உடன் இணைந்து நடத்தும் சீர்மைப்பாடு செயற்றிட்டம்

கிளிநொச்சியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு புலம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனமும் (IOM) தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து செயற்பட்டு வரும் "சீர்மைப்பாடு" சுயமுயற்சித்திட்டத்தில் இதுவரை 300 பேர் இனங்காணப் பெற்றுள்ளனர். 50 பேருக்கு 30,000 ஆயிரம் முதல் 40,000 வரை சுயதொழில் புரிவதற்காக் பணம் வழங்கப் பெற்றுள்ளது. அவர்களின் திறமைக்கேற்ப தையல் இயந்திரங்கள், சிறு வர்த்தக நிறுவனங்கள் தொடங்குவதற்கான உதவிகள் செய்யப் பெற்றுள்ளன. காணிகள் முறையாகப் பண்படுத்தப பெற்று காணப்பட்ட இடங்களில் பயனாளிக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வாங்கிக் கொடுக்கப்பெற்றுள்ளது. கோழி, ஆடு,மாடு வளர்க்கத் தகுதியுடைய 25 பேரை இனங்கண்டு உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமான சமுதாய முன்னேற்றக்கழகத்தின் உதவியுடன் உதவியுள்ளோம்.

மேலும் 06 பயனாளிகளுக்கு உழவு இயந்திர திருத்துனர் பயிற்சி, தையல் பயிற்சி என்பன பயில நிறுவனம் உதவிகள் செய்துள்ளது. 2005 ஏப்ரல் மாதத்தில் 300 பயனாளிகளுக்கு சீர்மைப்பாடு செயற்றிட்டம் பூர்த்தியாவதற்கான காலக்கெடு நிர்ணயிக்கப் பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் திட்டம் பூரணப்படுத்தித் தரும் வகையில் செயற்படுமிடத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், புலம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனமும் சீர்மைப்பாடு திட்டத்தை திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க எண்ணியுள்ளது.

# வன்னேரிக்குளம் ம.வியின் பரிசளிப்பு விழா

கிளி/வன்னேரிக்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் பி.ப.3.00 மணியளவில் வித்தியாலய முதல்வர் சு.தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை ஊரகவளர்ச்சி நடுவகப்பணியகம் கிளிநொச்சியைச் சேர்ந்த தமிழன்பன் ஏற்றிவைக்க. வித்தியாலய கொடியினை வித்தியாலய முதல்வர் ஏற்றி வைக்க, தொடர்ந்து அரங்கத்தில் விருந்தினர்களின் உரையைத் தொடர்ந்து மாணவர்கட்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அயற்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், வித்தியாலய சமுகத்தினரும் கலந்து சிறப்பிக்க தொடர்ந்து மாணவர்களால் கலைநிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. மாலை 6.30 மணியளவில் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

# வீதி மிக மோசம் பயணிகள் அசௌகரியம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு- சுதந்திரபுரம் சந்தியிலிருந்து கொலனிப் பகுதிக்குச் செல்லும் வீதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வீதி வழியே அன்றாடம் பல தேவைகள் கருதி பயணிப்பவர்கள் பெரும் இடையூறுகளை எதிர் நோக்கியுள்ளனர்.

தற்போதைய பருவ மழையால் வீதியில் காணப்படும் பள்ளங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மேலும் சிரமங்களுக்கு உள்ளாகும் நிலை தோன்றியுள்ளது. எனவே இவ்வீதியின் நிலையைக் கருதி புனரமைப்புச் செய்துதர சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (19)




பூநகரியில் பெரு வெள்ளத்தால் மக்கள் செட்டியகுறிச்சி, கறுக்காய்த்தீவு அ.த.க. பாடசாலை, ஞானிமடம் அ.த.க பாடசாலையில் தங்கியிருக்கும் காட்சி. [34]



பூநகரி பரந்தன்வீதியில் தமிழீழ போக்குவரத்து சேவைக்குச் சொந்தமான பேருந்து கொல்ல குறிச்சியில் புதைந்துள்ளது.(34)

# சிங்களதேசம் எம்மை உதாசீனப்படுத்தினால் தமிழீழம் தமிழர்களால் அமைக்கப்படுவது உறுதி!

## -தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளர்

(தென்மராட்சி)

**எமது தலைவரின் உரையில் பொதிந்துள்ள ஆழமான அர்த்தங்களை சிங்கள தேசம் புறக்கணிக்கும் எனில், உதாசீனம் செய்யுமெனில் சுதந்திர தமிழீழத்தை தலைவர் வழியில் சென்று தமிழர்கள் அமைப்பார்கள் என்று நுணாவில் அமிர்தாம் பிகை வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாடசாலை பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தெரிவித்தார்.**

சிங்கள தேசத்திற்கும் தமிழ் தேசத்திற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று ஆண்டுகள் நிறைவடைகின்ற சூழ்நிலையில் சிறிலங்கா அரசினால் ஒப்பந்தத்தில் சொல்லப் பட்ட எந்தவொரு விடயங்களும் நிறைவேற்றப்படாத சூழ்நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் துயரங்களையோ இன்னல்களையோ சிங்கள தேசமும் அதன் அரசியல் தலைமை களும் சரியாக புரிந்து கொண்ட தாக தெரியவில்லை, அல்லது ஆக்கபூர்வமான நடவடிக்கை களையோ, இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கான ஏற்ற சூழ் நிலையோ, இதுவரை சிங்கள அரசியல் தலைமைகளாலும் எடுக் கப்படவும் இல்லை. இப்படியாக சமாதானத்தின் பெயரால் கடந்து வரும் மூன்றாண்டுகள் எந்தவொரு பலனையும் எமது மக்கள் அடைய முடியவில்லை.

எமது தேசியத்தலைவர் அவர் கள் மாவீரர் தின உரையில் சுட்டிக் காட்டியது போல் போரும் இன்றி சமாதானமும் இன்றி எமது மக்கள் அரசியல்வெறுமைக்குள் தொடர் ந்தும் சிறைபட்டுக்கிடக்க முடியாது, பொறுமைக்கும் எல்லைக்கோடுகள் உண்டு, அந்த எல்லைக்கோட்டில் இன்று நிற்கின்றோம். என்ற தீர்க்க தரிசனமான எமது தலைவரின் உரையில் பொதிந்துள்ள அழமான அர்த்தங்களை சிங்கள தேசம் புறக்கணிக்கும் எனில் உதாசீனம் செய்யும் எனில், சுதந்திர தமிழீழ அரசை தலைவர் வழியில் சென்று தமிழர்கள் அமைப்பார்கள் அதற்கான இழப்புக்களை கடந்த ஐம்பது வருடங்களாய் இத்தேசத் தில் சந்தித்து வருகின்ற இனம் என்ற அடிப்படையில் தமிழினம் எதற்கும் தயாராகவே இருக்கிறது.

போரா, சமாதானமா. இந்த நாட்டில் தேவை என்பதை சந்திரி காவினுடைய பொய் உதடுகள் சொல்லட்டும். தமிழர்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள், இதனாலேயே கடந்த மூன்றுவருடங் களாய் பல இழப்புக்களுக்கு மத்தியிலும் எமது தேசியத் தலைவர் அவர்கள் பொறு மைகாத்து வருகின்றார். காத்திருப் புக்கான காலமும் விடைசொல்ல வேண்டியகட்டமும் நெருங்கி வருகின்றது என்றார். (28)

### பரீட்சைக்கு விண்ணப்பிக்குக!

யாழ்.சைவபரிபாலன சபை யினரால் நடத்தப்பட்டு வரும் சைவ சித்தாந்த பிரவேசபால பாண்டிதர் தேர்வுகள் 2005 வைகாசிமாதம் முதல்வாரத்தில் நடைபெறும். விண் ணப்பமுடிவு திகதி 31.12.2004 விண்ணப்பப் படிவங்களை சைவ பரிபாலனசபை, 66 கல்லூரி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள் ளலாம்.

## க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கு யுனிசெப் வழிகாட்டல் வகுப்பு

யாழ்.தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் கல்விபயிலும் கல்விப் பொதுத்தராதரசாதாரணதர வகுப்பு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கான வழிகாட்டல்களை வழங்க ஐக்கிய நாடுகள் சபை யின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்புகள் மற்றும் இடப் பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேச மாணவர்களின் கல்வித்தர மேம் பாட்டினை கவனத்தில் கொண்டே இவ்வாறான வழிகாட்டல் வகுப்புக் களை நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

அந்த அடிப்படையில் எதிர்வரும் 16 ஆம் திகதி பாடசாலை மட்டத்திலான கணித, தமிழ், ஆங்கில பாடவழிகாட்டல் வகுப்புக்களை ஐக்கியநாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஏற்பாடு செய்துள்ளது. (33)

## நயினாதீவிற்குச் செல்லும் பொதுமக்கள் மீது சிறிலங்கா கடற்படை கெடுபிடி அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். நயினா தீவிற்குச் செல்லும் மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகளை சிறிலங்காக் கடற்படையினர் மீளவும் தீவிரப்படுத் தியிருக்கின்ற னர்.

அந்தவகையில் நயினா தீவிற்குச் செல்லும் பொது மக்களைக் குறிகட்டுவான் இறங்கு துறைப்பகுதியில் வைத்து கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்துவதுடன் இளம் வயது டையவர்களை தனிமையாக இராணுவக் காவலரண்களுக்குள் அழைத்துத்துச் சென்று சோத னைகள் செய்வதுடன் விசாரணை களையும் மேற்கொண்டு வரு கின்றனர்.அத்துடன் இப்பகுதிக்குச் செல்வோர் அனைவரினதும் அடையாளஅட்டைகளையும் சோதனை செய்து பதிவுசெய்த பின்னரே தொடர்ந்து பயணிக்க படையினர் அனுமதிக்கின்றனர். இதுதமது இயல்பான போக்கு வரத்து நடவடிக்கைகளைப் பாதித் திருப்பதாக மக்கள்விசனம் தெரி வித்துள்ளனர். (33)

## அப்பாவி இளைஞர்களிடம் பறிக்கப்பட்ட மிதி வண்டிகள் நீதிமன்றில் ஒப்படைப்பு

-பொலிசாரின் நடவடிக்கையால் பொதுமக்கள் விசனம்

(தென்மராட்சி)

சிங்கள படைகளின் அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராக கடந்த 20 ஆம் திகதி பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக் களினால் நடத்தப்பட்ட ஹர்த் தாலின் போது, கொடிகாமத்தில் சாத்வீக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் மீது பொலிசார் மற்றும் இராணுவத் தின்துணையுடன் தடியடி நடத்திய வேளை சாலையில் மிதிவண்டிகளில் வந்து கொண்டிருந்த இரு அப்பாவி இளைஞர்களின் இரண்டு மிதிவண்டிகள் சிறிலங்காப் பொலி சாரால் பறித்து செல்லப்பட்டதாக தெரியவருகிறது.

இது குறித்து மறுநாள் காலையில் மிதிவண்டிகளை ஒப்ப டைக்கக் கோரி, பொலிஸ்நிலையம் முன்திரண்ட மக்களுக்கு உடனடி யாக இரண்டு மிதிவண்டிககளையும் ஒப்படைப்பதாக கூறியஉறுதி மொழிகளுக்கு மாறாய் கொடி காமம் பொலிசார் இரண்டு மிதிவண்டிகளையும் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவுசெய்து ஒப்படைத் திருப்பதாகவும் இதனால் அப்பாவி இளைஞர்கள் இருவர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. பொலிசாருடைய இத்தகைய செயற்பாடுகள் கடும் அதிருப்தியை தோற்றுவித்துள்ள தாகதெரியவருகிறது. (28)

## டிறிபேக் கல்லூரியில் இன்று கட்டடத் திறப்பு

-சுவிஸ் தூதுவர் வருகை

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டிற்கான விஜய மொன்றைமேற்கொண்டு இலங் கைக்கான சுவிஸ் நாட்டின் தூதர் பேனாடினோ றெகலோணி இன்று வருகை தரவுள்ளார்.

அபிவிருத்திக்கும், ஒத்துழைப் பிற்குமான சுவிஸ் நிறுவனத்தின் பிரதி நிதியான இவர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியினில் கட்டி வழங்கப்பட்டுள்ள வகுப்பறைக ளைத்திறந்து வைக்கும் பொருட்டே அவர் வருகை தரவுள்ளார்.

அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் நிறுவனத்தால் டிறிபேக் கல்லூயில் ஆரம்பப் பிரிவுக்கான கட்டடம் மற்றும் செயற்பாட்டறை என்ப வை தற்போது புதிதாக அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலப்பகுதியினில் இடம் பெற்ற இராணுவ நடவடிக் கைகளின் போது சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பெரும் சேதங் களைச் சந்தித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (27)

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு ஐம்பது ஆயிரம் ரூபா நன்கொடை

(நல்லூர்)

மக்கள் வங்கியினரால் நடத்தப் பட்ட இளம் சாதனையாளர் தெரி தலைத் தொடர்ந்து இளம் சாதனை யாளர் தெரிவு செய்யப்பட்ட பாட சாலைகளில் ஒன்றான தெல்லிப் பழை யூனியன் கல்லூரி 50 ஆயிரம் ரூபா நன்கொடை பெற தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரிகளில் இருந்து ஐந்து இளம் சாதனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்களுக்கு நன் கொடையாக10ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளன. இவர்கள் மக்கள் வங்கியில் கணக்கு வைத் திருப்பவர்களாக இருந்தால் இத் தொகை இரட்டிப்பாக 20 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படவுள்ளன.

இதேநேரம் சாதனையாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பாட சாலை கள் பின்தங்கிய நிலையில் இருப் பதுடன் மக்கள் வங்கியின் சிசு உதான கருமபீடத்தைக் கொண்டி ருந்தால் அப்பாடசாலை களுக்கு 50 ஆயிரம்வழங்கப் படவும் உள்ளன.

இந்நிலையில் வலி.வடக்கு பகுதியைச் சேர்ந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இடப் பெயர்வு களுக்கு உள்ளாகி அடிப்படை வசதிகளான ஆய்வுகூடம், நூலகம்,விளையாட்டு மைதானம் என்பவை கூடஇல்லாது இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சிரமத்துடன் இயங்கி வருகின்றது. மாணவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை உருவாக்கும் நோக் கில் சிசு உதான கருமபீடம் மாணவர்களின் உதவியுடன் இயங்கி வருகின்றமையால் இப் பாடசாலை 50 ஆயிரம் ரூபாவைப் பெறதெரிவு செய்யப்பட்டுள்ளது. (14)

## மணற்காட்டில் சட்டவிரோதமாக சவுக்கு மரங்கள் தறிப்பு

-பொலிசாரைத் தடுக்க வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியில் உள்ள மணற்காட்டுப் பகுதிகளில் சட்ட விரோதமாக சவுக்குமரங்கள் தறிக்கப்பட்டு வருவதாக வடமராட்சி கிழக்கு மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இச்சட்டவிரோத நடவடிக்கையால் பல்வேறு விதமான சூழல் தாக்கங் கள் குறித்த அபாயமுள்ள போதும் சிறிலங்கா பொலிசார் கவனயீனமாக இருந்து வருவதால் இந்நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. (33)

## நுளம்புகள் பெருக்கம்

(தென்மராட்சி)

தென்மராட்சிபகுதியில் நுளம் புப்பெருக்கம் அதிகரித்து வரு கிறது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் இப்பிரதேசம் முழு வதும் வெள்ளக்காடாய் மாறியுள் ளதால் பரவலாக அனைத்து இடங் களிலும் நுளம்புப் பெருக்கம் அதிகரித்து இருப்பதுடன், தொற்று நோய்கள், பரவும் அபாயம் இப்பிரதேசத்தில் எழுந் திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. மக்கள் விழிப்புடன் இருந்து நோய் தடுப்பு நடவடிக் கையில் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். (28)

## கட்டாக்காலி மாடுகளால் நெல்வயல்கள் அழிப்பு

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் வடக்கு மருதங்குளம்பகுதியில், கட்டாக் காலி மாடுகளால் பல ஏக்கர் கணக்கான நெல்வயல்கள் தினந் தோறும் அழிக்கப்பட்டு வருவதாக இப்பகுதியின் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற மக்களு டைய நூற்றுக்கணக்கான மாடுகள் .இங்குள்ள சிறிலங்காப் படைக ளின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் தங்கி இருந்து கொண்டு, இரவு வேளைகளில் கூட்டம், கூட்டமாய் இவ்வயல் நிலங்களில் புகுந்து நெற் பயிர்களை தின்பதுடன் மிதித்து நாசமாக்கி வருவதாக இப்பகுதியில் உள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் என்ன செய்வது என்றுதெரியாத நிலையில், இம் மாடுகளின் நடமாட்டத்தை கட்டுப் படுத்துவது குறித்து தீவிரமாக சிந்தித்து வருகின்றனர். (28)


### பரீட்சைப் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளக் கோரல்

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயத்தில் உள்ளபாடசாலைகளில் நடந்து முடிந்துள்ள தரம்-9 மாகாண மட்ட பரீட்சை பெறுபேறுகள் தரம்-11மாவட்டமட்ட பரீட்சை களின் பெறுபேறுகளை, தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள கல்வி அபிவிருத்திப் பிரிவில், பாடசாலை அதிபர்கள் உடன டியாக தொடர்பு கொண்டு பெற் றுக் கொள்ளும்படி, தென்ம ராட்சி வலயக்கல்வி அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது. (28)

# சனிக்கிரகத்தை ஆய்வு செய்யும் நாஸா வெளியிடும் புதிய தகவல்கள்

அமெரிக்காவின் நாஸா விண்வெளி நிலையத்தின் காசினி ஆய்வுக்குழுவின் பௌதிக விஞ்ஞானி றொபர்ட் மீவெல் சனிக்கிரகத்தில் புதிதாக ஆய்வு நடத்தி பல அரிய தகவல்களை வெளியிட்டுள்ளார். அக்கிரகத்தில் விசேட அம்சமாக விளங்கும் "வளையம்" தொடர்பாகவே அவர் மேலும் விபரங்களை வெளியிட்டுள்ளார்.


சனிக்கிரகத்துக்கு அனுப்பமுன்பு காசினி விண்கலம் பரிசோதிக்கப்படுகிறது.

ஆரம்பகாலத்தில் தொலை நோக்கி மூலம் கண்டறியப்பட்ட இந்த வளையத்தை ஆய்வு செய்ய 1979 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட வோயேஜ் மின்கலத்தின் உதவியுடன் மேலும் பல வளையங்கள் இருப்பதும் அறிய வந்தது. ஞாயிற்றுத் தொகுதியில் சூரியனிலிருந்து 6ஆவது இடத்தில் அமைந்துள்ள கோளாகும். இதன் விட்டம் ஏறத்தாழ 500 கிலோ மீற்றராகும். சூரியனிலிருந்து 1426 மில்லியன் மீற்றர் தொலைவில் அது அமைந்துள்ளது. சனியின் சுழற்சிக்காலம் 10 மணித்தியாலமாகும். சனிக்கிரகத்தின் பிரகாசமான வளையம் முதல் முதலாக 1610 ஆம் ஆண்டில் கலிலியோ கலிலியினால் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வளையம் அதிகளவு கந்தகத்தைக் கொண்டுள்ளதால் வியாழனின் வளையத்தை விடவும் பிரகாசமானதாகக் காணப்படுகிறது.

அத்துடன் சனிக்கிரகத்தின் வளி மண்டலம் மாறும் தன்மையையும் கொண்டிருப்பதாக தெரியவருகிறது. சனிக்கிரகத்தின் பிரகாசமான வளையம் மூன்று வளையங்களால் ஆன ஒன்றாகிய போதும் வெளிப்புறமாக அமைந்துள்ள வளையமே மிகப் பிரகாசமானதாகவுள்ளது. இவற்றுக்கிடையிலான இடைவெளி காசினி பிளவு என அழைக்கப்படுகிறது. காரணம் காசினி இந்த இடைவெளிபற்றி ஆய்வு நடத்தி தகவல்களை வெளியிட்டி ருப்பதாலாகும்.

1655ஆம் ஆண்டு கிறிஸ்ரியன் ஹயின்கன்ஸ் என்பவர் சனிக்கிரகத்தின் பிரதானதுணைக்கோள் பற்றிய தகவல்களை அறிந்துள்ளார். அது சனிக்கிரகத்திலிருந்து சுமார் 12 லட்சம் கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இதைத் தவிர ஜானூஸ், மீமாற்,என்சிலாடஸ், பத்திஸ், டியோனி, ஈஹா போன்ற 1000 கி.மீ.விட்டத்தைக் கொண்ட துணைக்கோள்களும் காணப்படுகின்றன.

1997 ஆம் ஆண்டு சனிக்கிரகம் பற்றியும், டைட்டன் கிரகம் பற்றியும், ஆய்வு நடத்த காசினி ஹைஜன் எனப்படும் கலம் அனுப்பப்பட்டது. இது 2004 ஆம் ஆண்டு மேற்படி கிரகங்களை எட்டியது.

காசினி சனிக்கிரக மண்டலத்தில் காணப்படும் ஏனைய கிரகங்கள் பற்றி நிறையத் தகவல்களையும், புகைப்படங்களையும் புவிக்கு அனுப்பியுள்ளது. அத்துடன் சனிக்கிரகம் பல்வேறு வாயுக்களினால் உருவாக்கப்பட்ட ஒரு கோள் என்றும், தடித்த திரவத்தினால் ஆனது என்றும் அங்கு சூறாவளிக்காற்று காணப்படுகிறது என்றும் மத்திய கோட்டுப் பகுதிகளில் 1570 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுத்தொகுதியில் காணப்படும் கோள்களில் வீசும் மிகவேகமான காற்று இது என்றும் ஹீலியம் நீராவியாக மாறி மழையாகப் பெய்வதாகவும் ஆய்வுகளின் மூலம் நம்பப்படுகிறது.

சனிக்கிரகத்தில் அமைந்துள்ள வளையங்கள் பற்றி ஊடகத்துறையினருக்கு செய்தி வழங்கிய விஞ்ஞான கூடப் பணிப்பாளர் சார்ல்ஸ் எலாசி சனிக்கிரகத்தை லோட்ஒப்தறிங்ஸ் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அங்கு ஏழு வளையங்கள் இருப்பதாகவும் அவை A,B,C,D,E,F,G என்ற ஆங்கில எழுத்துக்களினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் E என்ற வளையம் மிகவும் பெரியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசினி விண்கலத்தின் பரிசூட் ஒன்று இம்மாதம் 24 ஆம் திகதி டைட்டான் கோளத்தில் தரையிறங்கவுள்ள நிலையில் அது மேலும் பல தகவல்களை வெளியிடும் என நம்பப்படுகிறது.

# பற்காரையில் மறைந்துள்ள கிருமிகள் நுரையீரலைத் தாக்கி உயிரைப் பறிக்கலாம்

பற்களை ஒழுங்காக பராமரிக்கா விட்டால் அதில் தங்கும் கிருமிகள் நுரையீரலைத் தாக்கி மரணம் கூட ஏற்படவாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. என்றுஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. நியூயோர்க்கில் செயற்பட்டு வரும் பப்பல்லோ பல்கலைகழகம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. இது தொடர்பாக இப்பல்கலைக்கழக ஆய்வாளர் அலி எல் சோல்க், வெளியிட்டுள்ள ஆய்வுக் கட்டுரையில் பற்களை ஒழுங்காக பாராமரிக்கா விட்டால் அவற்றில் காரை படிகிறது. அதில் தங்கும் நுண்கிருமிகள் நுரையீரலைத் தாக்குகின்றன. இதனால் நிமோனியாக் காய்ச்சல் ஏற்படுகிறது. இதற்கு சரியான மருத்துவம் பார்க்கா விட்டால் மரணம் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. இந்த ஆய்வு தற்போது சிறியளவில் நடத்தப் பட்டுள்ளது நிமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வயதான எட்டுப்பேரின் பற்காரையில் நுண்கிருமிகள் இருந்தன. பற்கள் பராமரிப்புக்கும், சுவாச தொற்று நோய்க்கும் தொடர்பு உள்ளது என்பது இப்போது தான் முதன் முதலாக தெரியவந்துள்ளது.

இதையடுத்து நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 49 நோயாளிகளிடம் பரிசோதனை மேற்கொண்டோம். இவர்களில் 28 பேரின் பற்களில் கிருமிகள் இருந்தன. இவர்களில் எட்டுப்பேரை தனியாகப் பிரித்து அவர்களின் நுரையீரலில் இருந்த கிருமிகளையும், பற்காரை கிருமிகளையும் எடுத்து அவற்றின் மரபணுக்களைச் சோதித்தோம். நான்கு பேர்களிடம் எடுக்கப்பட்ட இந்த இரண்டு கிருமிகளின் மரபணுக்களும் ஒரே மாதிரியாக இருந்தன. இவ்வாறு கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

# புகைப்பதால் புண் ஆறாது

சிகரெட் பிடித்தால் காசநோய் வரும், புற்று நோய்வரும், விரைவில் மரணம் வரும் என்று தான் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் தற்போது புதிதாக புண்ஆறுவது தாமதமாகும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கண்டு பிடித்துள்ளார்கள். உடலில் காயம் ஏற்பட்டால் அது குணமாக நான்கு வகைச்செயற்பாடுகள் முக்கியம். முதலாவது காயம்பட்ட இடத்தில் இரத்தம் உறையவேண்டும் அடுத்தது சீழ் பிடிக்காமல் இருக்க வேண்டும். புதிய செல்கள் பெருகவேண்டும் திசுக்கள் மறுபடியும் அந்த இடத்தில் முறையாகக் கூட வேண்டும். இந்த நான்கு செயற்பாடுகளும் சிகரெட் பிடிப்பதனால் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.இதனால் காயம் ஆறுவது தாமதமாவதுடன் அந்த இடத்தில் பெரிய அளவில் தழும்பு ஏற்படக்கூடும் என ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

# புதிய சிகிச்சை முறை

மனிதன் உறவில் தொப்புள் கொடி மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தொப்புள் கொடி பந்தம் எனக் கூறுவது வழக்கம். இந்த தொப்புள் கொடி சாதாரணமானது அல்ல மிகமுக்கியமானது என தற்போது தெரிய வந்துள்ளது. தொப்புள் கொடியிலுள்ள ரத்த செல்களுக்கு நோய் தீர்க்கும் அபார ஆற்றல் உண்டு எனக் கண்டு பிடித்துள்ளனர் தென் கொரிய மருத்துவ வல்லுனர்கள். ஹவாங் மிசூன் என்ற 37 வயது பெண் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு விபத்தால் முதுகுத் தண்டில் அடிபட்டு படுத்த படுக்கையாகக் கிடந்தார். இவருக்கு பார்க்காத வைத்தியம் இல்லை எனினும் எந்த முன்னேற்றமும் இல்லை. 20 ஆண்டுகளாக அதே நிலைதான். தொப்புள் கொடியிலுள்ள ரத்த செல்களை எடுத்து அதிலிருந்து மருந்து தயார் செய்து அதைப் பயன்படுத்தி அந்தப் பெண்ணுக்கு சிகிச்சையளித்தனர். சிகிச்சையில் முன்னேற்றம் ஏற்பட்டது. அவருக்கு அளிக்கப்பட்ட செல் தெராபி சிகிச்சையால் தற்போது ஊன்றுகோல் உதவியுடன் அந்தப் பெண்மணி நடத்து வருகிறார்.இந்தப் புதிய வகை சிகிச்சை உலகில் இதுவே முதல் முறையாகும்.

## மாணவிகளைக் காப்பாற்றிய டொல்பின்


கடலில் குளித்த மாணவிகளை டொல்பின் கூட்டம் காப்பாற்றியது. நியூசிலாந்து நாட்டில் புகழ்பெற்ற கடற்கரைச் சுற்றலாத் தளம் ஒன்று உள்ளது. இந்தக் கடலில் நிசி என்ற 15 வயது மாணவியும், அவளுடைய 2 தோழிகளுடன் சேர்ந்து நீச்சலடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென 10அடி நீள சுறாமீன் ஒன்று மாணவிகளை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. இதைக் கவனித்த டொல்பின் மீன் கூட்டம் நிசி மற்றும் அவளது தோழிகளை நெருக்கமாகச்சுற்றி பாதுகாப்பு வலயம் அமைத்தன. இதனால் சுறா மீன் பிடியிலிருந்து மாணவிகள் காப்பாற்றப்பட்டனர்.

# வழிகாட்டும் கணினி

ஒரு நாட்டின் பாதைகள் பற்றி தெரிந்து வைத்திருப்பது உல்லாசப் பயணிகளுக்கு மிக அவசியமாகும். தற்போது அவ்வவ் நாடுகள் வழிகாட்டிக் கையேடுகளை வழங்கிவரினும் நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பயனாக வழிகாட்டும் கணினி ஒன்றைத் தயாரிப்பதில் ஜப்பான் வெற்றி கண்டுள்ளது.

இதன் மூலம் அந்நாடு பிரதான பாதைகளையும் முக்கிய இடங்களையும் பதிவு செய்து பயணிக்கு உதவி புரிகிறது. அத்துடன் இதனை ஓய்வு நேரங்களில் விளையாட்டு கணினியாகவும் பயன்படுத்தலாம். டிஜிட்டல் தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட இச்சாதனம் விரைவில் உபயோகத்திற்கு வரவிருக்கிறது.





# அரசியலை இலக்காகக் கொண்ட ஐ.ம.சு.முன்னணி அரசின் வரவு செலவுத்திட்டம்-2005

**கெல்மன்**

சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்துள்ளது. அதாவது அடுத்தாண்டில் அரசாங்கத்தால் பெறக்கூடிய வருமானங்களினதும், ஏற்படக்கூடிய செலவீனங்களினதும் மதிப்பீடாகும்.

இந்த வரவு- செலவுத்திட்டமானது முற்றிலுமாக அரசியல் அபிலாசைகளை இலக்காகக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதல்ல. இது குறித்து பல கண்டனங்களும் எழாமலில்லை. ஏனெனில் ஏற்கெனவே உள்ள உள்ளூர் உற்பத்தித் துறையை அபிவிருத்தி செய்யத்தக்க பாரிய முதலீடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளோ அன்றி புதிய முதலீடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளோ ஏற்றுமதியை அதிகரித்து அன்னிய செலவாணி பற்றாக்குறையை ஈடுசெய்யக் கூடிய உறுதியான திட்டங்களோ அன்றி இறக்குமதியைக் குறைக்கும் முகமாக பதிலான உற்பத்தித் திட்டங்களோ இந்த வரவு- செலவுத்திட்டத்தில் காணப்படவில்லை.இதனால் இந்த வரவு- செலவுத்திட்டத்தின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரிய அதிகரிப்பு ஏற்படவாய்ப்பில்லை. இதன் விளைவு பொருட்களுக்கான விலை அதிகரிப்பு, பணவீக்கம் மேலும் உயர்வடையவே வழிவகுக்கும் . நிதி அமைச்சர் வரவுசெலவுத்திட்ட உரையில் கூறியுள்ளதைப் போன்று அடுத்த ஆண்டில் பணவீக்கம் ஏழு முதல் எட்டு வீதமாக இருக்காது. தற்போதுள்ள 14 வீதத்திலிருந்து அதிகரிக்கவே வாய்ப்புண்டு. இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிராமிய பொருளாதார மேம்பாடே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பிரதான இலக்கு என நிதியமைச்சர் சரத் அமுனுகம வரவு-செலவுத்திட்ட உரையில் தெரிவித்திருந்த போதும், கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு வலுவான திட்டங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை. சிறியசிறிய ஊக்குவிப்புக்களுக்கான திட்டங்களே முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசின்மொத்த செலவீனமாக 48,530 கோடி ரூபாவாக இருக்கின்ற அதேவேளை மொத்த வருமானமாக 31,247.2 கோடிரூபாவும் பெறப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டின்படி 17,282.8 கோடி ரூபா துண்டு விழும் தொகையாகவுள்ளது.

கல்விக்கு 5,428 கோடி ரூபாவும், சுகாதாரத்திற்கு 4,040.8 கோடி ரூபாவும் , உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 5,547.9 கோடி ரூபாவும். நலன்புரி நடவடிக்கைகளுக்கு 3,252.2 கோடி ரூபாவும், விவசாயத்துறைக்கு 2,656.1 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு வீதத்தை ஒதுக்குவது என்றும் சுதந்திரமுன்னணியின் “ நாட்டின் முன்னேற்றத்திற்கு” என்ற மூன்று லட்சம் வீடுகளை அமைக்கும் திட்டத்திற்கு மேலும் 50 கோடி ரூபாவை ஒதுக்குவது என்றும் பாற் பண்ணை கைத்தொழிலுக்கு மேலும் ஐந்து கோடி ரூபாவை ஒதுக்குவதென்றும், தேயிலை வாசனைப் பொருட்கள் மூலிகைகள், உலர்த்திய தேங்காய் எண்ணெய் விதைகள், பருப்பு வகைகள் மரமுந்திரிகை, மரக்கறிகள். பழங்கள் போன்றவற்றின் உற்பத்தி அதிகரிப்பு, ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் 42 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்குதல், அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு போன்ற திட்டங்களும் மக்களை உடனடியாகக் கவரக்கூடிய வகையிலும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.யினரை திருப்திப்படுத்தும் வகையிலும் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டு நாணயங்களில் விற்பதை அனுமதிப்பதற்கான “ஒரு கரைகடந்த ஏற்றுமதி கடைத் தொகுதி கிராமம்” நிறுவப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது ஏற்றுமதியை கணிசமான அளவு உயர்த்துவதற்கு ஊக்கம் கொடுக்கக் கூடியதாய் இருந்தாலும் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கப்படாத பட்சத்தில் அது சாத்தியமா என்பது கேள்விக் குறியே. அத்துடன் கம்பனிப் படுகடன் மீதான பிடித்துவைத்தல்,வரிஅகற்றப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இது கம்பனிப்படுகடன் சந்தைக்கு புத்துயிர் அளிக்கும் விதத்தில் செயற்பட்டிருக்கிறது. இது கம்பனிகளின் வளர்ச்சிக்கு முன்னேற்றகரமானதாகவே கொள்ள முடியும். அத்துடன் திறைசேரி உண்டியல்களின் இரண்டாம் தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெறப்படும் இலாபம் வருமான வரிக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் வாங்கிவிற்கும் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவருக்குக் கிடைக்கும் வட்டிக்கும் மூலதன இலாபத்திற்குமிடையில் சிறப்பான வேறுபாடு இல்லாத நிலையே தோன்றும். கம்பனி ஒன்றில் வழங்கப்படாதிருக்கும் பங்கு இலாபத்திற்கு வரிவிதிக்கும் வகையில் ஏற்கனவே இருந்த கட்டுப்பாடு தற்போதைய வரவு செலவுத்திட்டத்தில் நீக்கப்பட்டுள்ளது. இது கம்பனிகளின் வளர்ச்சி அவற்றின் எதிர்காலச் செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளையும் பாதிக்கவல்லது.


பங்குச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான நிதியியல் பணிகள் மீதான பெறுமதி சேர் வரிகள் பிரயோகத்தினையும் பங்கு விற்பனை இலாபங்கள் மீதும் விதிக்கப்பட்டவருமான வரியினையும் பங்குச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் மீதான 0.2 சதவீத வரியை அகற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இது பங்குச் சந்தை நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கக் கூடும்.

ஆடைக் கைத்தொழிலின் உற்பத்தியாக்க முன்னேற்ற வழிமுறைகளுக்கு பத்துக்கோடி ரூபா மானியம் வழங்கி உற்பத்தியை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்த வரை ஆடைக் கைத்தொழில் கடந்த சில வருடங்களாக வீழ்ச்சிப் போக்கையே கொண்டுள்ளது.

ஆடை தொழில்சாலைகள் பல மூடப்பட்டுள்ளன. பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலையிழந்துள்ளனர். அதேவேளை அமெரிக்கா இலங்கையிடமிருந்து தைத்த ஆடைகளை இறக்குமதி செய்வதற்கு செய்துகொண்ட முன்னுரிமை ஒப்பந்தம் இவ்வாண்டுடன் காலாவதியாகின்றது. உலகலாவிய புடவைக் கைத்தொழிலின் முழுமையான தாராளமாக்கலின் காரணமாக இலங்கைத் தயாரிப்பாளர்கள் ஒரு இடர்பாடான சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் தைத்த ஆடை ஏற்றுமதி வருமானம் அடுத்த ஆண்டில் குறைவடைய வாய்ப்புண்டு. மேலும் மீன்பிடி வள்ளங்களையும், கருவிகளையும் கொள்வனவு செய்வதற்கு சிறப்புக் கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இரத்தினக்கல் செதுக்கும் பத்து நிலையங்களை நிறுவத்திட்டமிடப்பட்டுள்ளது. 2.5 கோடிரூபா தேறிய சொத்துக்களைக் கொண்டிருக்கும் வெளிநாட்டு வியாபாரிகள் இலங்கைக்குள் குடிபெயர அல்லது கவர்ந்திழுக்கும் திட்டங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

விவசாயத்தில் முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஐந்து ஆண்டுகாலத்திற்கு வருமான வரிவிலக்களிக்கப்படவுள்ளது. இவையெல்லாம் சிறிய அல்லது நடுத்தர தொழில் முயற்சிகளை ஓரளவு ஊக்குவிக்க வல்லன. ஆனால் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துமா என்பது கேள்வியே. பெரும்பாக பொருளாதார ஊக்குவிப்புக்கள் அல்லது பாரிய அன்னிய முதலீடுகளுக்கான ஊக்குவிப்புக்கள் காணப்படவில்லை.

500 கோடி ரூபா மூலதனத்தில் எஸ்.எம்.பி வங்கி ஒன்றினை நிறுவவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இவ்வங்கியானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக்கு நிதி கொடுகடன் உத்தரவாதத்திட்டங்கள் பங்கு மற்றும் படுகடன் மூலதனம் மற்றும் மீளமைப்பு உதவி போன்றவற்றினை நேரடியாக வழங்கும். மேலும் இராஜரட்டை மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்குப் புதிய கட்டடங்கள் அமைக்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது. க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த 30 ஆயிரம் இளைஞர்களை அரச பணியில் அமர்த்த 110 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாகச் செய்யப்படக் கூடிய அல்லது செய்யப்பட வேண்டிய செலவீனங்கள் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவற்றின் மற்றுமொரு முக்கியமான தவிர்க்க முடியாத மீண்டெழும் செலவீனமாக வெளிநாடுகளிலிருந்து அரசாங்கம் பெற்ற கடனுக்காக வருடாந்தம் செலுத்த வேண்டிய வட்டித்தொகை துண்டு விழும் தொகையை அண்மித்துள்ளது. இது அர சாங்கத்திற்கு ஒரு ஆபத்தான நிலைமையையே ஏற்படுத்த வல்லது.



இது ஒரு புறமிருக்க துண்டு விழும் தொகையான 17,287.8 கோடி ரூபாவை ஈடுசெய்வதற்கு அரசாங்கம் கடந்த காலங்களைப் போலல்லாது பெருமளவை உள்ளூர் நிதிமூலங்களினாலேயே ஈடுசெய்யத்திட்டமிட்டுள்ளது. அதாவது பற்றாக்குறையான 17,287.8 கோடி ரூபாவில் 10,500 கோடி ரூபாவை உள்ளூரிலிருந்து திரட்டப்படும் நிதி மூலம் ஈடுசெய்யவே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இது வெளிநாடுகளிடமிருந்து நிதியுதவி கிடைக்கும் என்று ஏற்கனவே அரசாங்கத்திற்கு இருந்த நம்பிக்கை குறைவடைந்துள்ளதையே காட்டுகின்றது. அத்தோடு உள்ளூரில் பெருமளவு நிதியை திரட்ட அரசாங்கம் திட்டமிட்டுள்ளமையானது எஞ்சியுள்ள அரசாங்க நிறுவனங்களை/ சொத்துக்களை தனியாருக்கு விற்கும் திட்டம் அரசாங்கத்திற் குள்ளதையே காட்டுகிறது. மேலும் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்வதன் மூலம் நிதியைத் திரட்டவும் அரசாங்கம் எண்ணியிருக்கிறது. இது அரசாங்க வர்த்தக வங்கிகளில் பொதுமக்கள் வைத்துள்ள சேமிப்புக்கள், முதலீடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் அரசாங்கச் செலவீனங்களுக்கு பயன்படுத்தப்படும் நிலைமையையே ஏற்படுத்தும். இதன் மூலம் வட்டி வீதம் உயர்வடையும் பணவீக்கமும் உயர்வடையும். இவை உடனடியான விளைவுகளல்ல. அந்த வருடத்தில் ஏற்படும் விளைவுகளாகவே இருக்கும். ஆனால் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வேலையற்ற பட்டதாரிகள் நியமனம், அரச ஊழியர்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபா வரையான மருத்துவக் காப்புறுதி ஒரு மில்லியன் ரூபா வரையான வீடமைப்புக் கடன் போன்ற சலுகை அறிவிப்புக்கள் உடனடி விளைவுகளாகும். இவை மூலமே அரசாங்கம் தனது அரசியலிலக்கை அடையப்பெற எண்ணுகிறது.

அடுத்தவருடம் அல்லது 2006 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் இவ்வாறான சலுகைகளை அறிவித்திருக்கிறது. இவற்றை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது உயர்வர்க்கம் மற்றும் மத்தியதர வர்க்கத்தினை கவர்ந்திழுக்கும் உபாயத்துடன் இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கீழ்வர்க்கத்தினர் இதனால் மேலும் பாதிப்படைவர் என்பதில் சந்தேகமில்லை. ஒட்டு மொத்தத்தில் இவ்வரவு- செலவுத் திட்டம் பொருளாதாரம் சார்ந்ததல்ல அரசியல் சார்ந்ததே. மக்களிற்கு உடனடி விளைவுகளை ஏற்படுத்தவல்ல உணர்ச்சிகளின் பால் மக்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. நீண்டகால பொருளதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இதனால் வரப்போகும் நீண்டகால பொருளாதார பாதிப்புக்களையும், மக்களே தமது தலைகளில் சுமக்க நேரிடும் என்பதே சரியானதாகும்.

● ● ●

# உயர்நீதிமன்ற தீர்ப்பைக் கண்டித்து வீதியிலிறங்கிப் போராடுவோம்

-திஸாநாயக்க மீதான தீர்ப்புக் குறித்து ஐ.தே.கட்சி

(கொழும்பு)

**எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு உயர்நீதிமன்றம் விதித்த தீர்ப்பைக் கண்டித்து வீதியிலிறங்கிப் போராடப்போவதாக ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தர்களான ராஜிதசேனாரட்ணவும், மகிந்த விஜயசேகராவும் நேற்று முன்தினம் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்**

உயர்நீமன்றத்தை அவமதித்ததாக எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு சிறைத்தண்டனை வழங்கிய உயர்நீதிமன்ற தீர்ப்பை முன்னரே தெரிவித்த அநுராபண்டாரநாயக்க மீது தாம் வழக்குத் தொடர முடியும். எஸ். பி. திஸாநாயக்க உயர்நீதிமன்றத்தை அவமதித்து கூறிய கருத்தை தேசிய தொலைக்காட்சி நிறுவனம் 31 தடவைக்கு மேல் ஒளிபரப்பியது. இதுவும் உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் ஒரு செயலாகும்.எனவே இதற்கு எதிராகவும் தாம் வழக்குத் தொடர முடியும். அத்துடன் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபடப் போகிறோம். மகிந்த விஜயசேகர தலைமையில் சனநாயக மீட்புக் குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது எனத்தெரிவித்தனர்.

ராஜித சேனாரட்ண மேலும் கருத்துரைக்கையில்; நேற்று முன்தினம் தானும் ஏனைய உறுப்பினர் சிலரும் எஸ்.பி திஸாநாயக்கவை பார்க்கச் செல்லும் போது வெலிக்கடச் சிறைச்சாலை அதிகாரி அதற்கு அனுமதி மறுத்ததாகவும் இது தமது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறிய ஒரு செயல் எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மட்டத்துக்கு தான் இவ்விடயத்தைக் கொண்டு செல்லப்போவதாகவும் அதற்கு இந்திய லோக் சபா உறுப்பினர் ஆதரவு அளிப்பதாகவும் தெரிவித்தார். தற்சமயம் ஏனைய கட்சியினருடனும்,மதக்குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திவரும் தமது கட்சி எதிர்வரும் 21ஆம் திகதி இந்தச் சம்பவத்தை ஆட்சே பித்து கொழும்பு கைபார்க் கோணரில் மாபெரும்எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாகத் தெரிவித்தார். (32)



எங்கள் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு ஆசியும், நீண்ட ஆயுளும் வேண்டி கனடா ஸ்காபறே நகரில் பெரிய சிவன்கோவிலில் 26.11.2004 திகதியன்று நடாத்தப்பட்ட சங்காபிஷேக நிகழ்வை இங்குள்ள படத்தில் காணலாம். அதில் பெருந்திரளான சைவப்பெருமக்கள் கூடி பிரார்த்தனையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுமுன் மகேஸ்வரனை ஆஜராக்க கோரமுடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட விதம் தொடர்பாக பாராளுமன்ற சிறப்புரிமைக்குழு முன்னிலையில் ஆஜராகக் கோருவதெனத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமளிதுமளியின் போது பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் மீது ஆளும் கட்சி உறுப்பினர்கள் தாக்க முற்பட்டனர். அதனை அடுத்து மகேஸ்வரன் பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்த்தனவை நோக்கி கண்ணாடி குவளை ஒன்றை வீசி எறிந்தார்.


எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு வழங்கப்பட்ட தண்டனை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரட்ண பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டதையடுத்தே குழப்ப நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து மகேஸ்வரனை ஆளும் கட்சியினர் தாக்க முற்பட்ட போதே இந்தச்சம்பவம் நடைபெற்றது.


இதன் போது மகேஸ்வரன் வீசி எறிந்த கண்ணாடிக்குவளை செங்கோல் மீது மோதி சபை நடுவே விழுந்ததாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை அடுத்த நாளாக கடந்த புதன்கிழமை ஆளும் கட்சியினருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து மகேஸ்வரன் செங்கோலைத் தூக்கிக் கொண்டு ஓடினார். முதலில் ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜெயசேகர, திலிப்வெத ஆராட்சி ஆகியோர் செங்கோலை எடுத்துச்செல்ல முற்பட்டவேளையில் ஆளும்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள் இவர்களைத்தாக்கி அதனைத் தடுக்க முற்பட்டனர்.

இதன்போதே மகேஸ்வரன் செங்கோலை அவர்களிடம் இருந்து வாங்கிக்கொண்டு ஓடியமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை மகிந்தானந்த அளுத்கமகே கருத்துரைக்கையில் பாராளுமன்றத்தில் செங்கோலை தூக்கிச்சென்றதன் பின் அதில் இருந்த 4 இரத்தினக்கற்களைக் காணவில்லை எனவும் அது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக்கேட்டுக்கொண்டார்.



மன்னார் நகர்பகுதியை அண்டி வீதியின் அருகே மன்னார் நகரசபையினால் கொட்டப்படும் குப்பையினால் நகர்ப்பகுதிகள் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் ஏற்படும் அபாயமும்உண்டு நீர் தேங்கி நின்று குப்பைகள் அழுகிக் கிடப்பதைப் படத்தில் காணலாம்.



கடந்த6.12.2004 அன்று மன்னார் நகரசபைமண்டபத்தில் நடைபெற்ற புனித சவேறியார் பெண்கள் கல்லூரியின் ஒளிவிழாவில் பாலர் பாடசாலை மாணவர்களின் பாண்ட்வாத்திய வரவேற்பு நிகழ்வினை படத்தில் காணலாம். (தீ)

# உணர்ச்சிபூர்வமாக நடைபெற்ற சிக்காக்கோ மாவீரர் நாள் நிகழ்வுகள்

தமிழீழ தேசிய மாவீரர்கள் நினைவு நாள் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் கடந்த சனிக்கிழமை உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

பொதுச்சுடரேற்றல், தமிழ் தேசியக் கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், அகவணக்கம் போன்ற தமிழீழ சம்பிரதாய முறைகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிறுவர்களின் அணிவகுப்புடன் கூடிய மலரஞ்சலியைத் தொடர்ந்து செல்வி. பிரியங்கா குமாரின் நடனாஞ்சலி மற்றும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உலகத் தமிழமைப்பின் தலைவர் விஸ்வநாதன், அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைத்தலைவர் பாபு, சிக்காக்கோவைச் சேர்ந்த சிந்தனையாளர் ராம் மோகன், த்மிழீழத்தைச் சேர்ந்த திருமதி. ப. மிருணாளினி, தஞ்சாவூரைச் சேர்ந்த அருட்தந்தை ஜோன் கென்னடி மற்றும் தமிழகத்தின் இளம் சிந்தனையாளர் அருட் சிதம்பரம் ஆகியோர் சிறப்புரை வழங்க, தமிழீழ பற்றாளர் சாம் குமார் அவர்கள் ஈழத் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் காலம் காலமாக எப்படி சிதைக்கப்பட்டன என்பது பற்றி விசேட உரையாற்றி நிகழ்வில் சிறப்பு மலரை வெளியிட்டார். நிகழ்வில் சரவணன் அவர்கள் தான் தனது கோடை விடு முறையில் மேற்கொண்ட யாழ்ப்பாண பயணத்தைப் பற்றியும் அங்குள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு எந்த வழியில் உதவ முடியும் என்பது பற்றியும் உரை நிகழ்த்தினார். சிக்காக்கோ உலகத் தமிழர் ஒழுங்கிணைப்பின் அமைப்பாளரும், இடைமேற்கு மாநிலத் தமிழ்ச்சங்கத்தின் தலைவருமான 'சிக்காக்கோ'' பாஸ்கர் 'விடிவை நோக்கி'' என்ற திரைத்தொகுப்பை வழங்கினார். மாலை 4 மணிக்கு ஆரம்பித்த நிகழ்வுகள் இரவு 8 மணியளவில் நிறைவுபெற்றன.


## ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்

04 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

2ஆம் லெப் தூயவதனா

இரத்தினசிங்கம் இரத்தினபிரபா



தாய் மடியில் 22 12 1982

தாய் மண்ணின் மடியில் 24 10 2000

03 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கப்டன் எழிலழகன்

இரத்தினசிங்கம் இரத்தினதிவாகரன்



தாய் மடியில் 18 02 1981

தாய் மண்ணின் மடியில் 11 12 2001

தாய் மண் மீட்பிற்காய் தாய் மடியிலிருந்து வந்து
தமிழ் மண்ணில் வித்தாகி நான்கு, மூன்று ஆண்டுகள்
ஓடினால் என்ன தமிழ் மண் உள்ளளவும்
நீவீர் இருப்பீர்கள் எமது உள்ளமதிலும்.

உங்களை நினைவுகூரும்.

அத்தைமார், அத்தான்
அக்காமார், அண்ணன்
மருமக்கள்.

(5343)


# விபத்து

(செட்டிகுளம்)

மன்னார் கட்டை அடம்பன் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியாவினூடாக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப் பட்டுள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் துவிச்சக்கர வண்டியும் வான் ஒன்றும் நேருக்கு நேராக மோதிக் கொண்டதில் துவிச்சக்கரவண்டியில் சென்ற 50 வயதான எம் .அந்தோனி என்பவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப் பட்டுள்ளார். (21)


## வைத்தியம்

செங்கண்மாரி,அல்சர்,ஆஸ்துமா, வாதநோய்கள்,வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு கருவழிதல், மகப் பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்கள், சகலவியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை வைத்தியகலாநிதி
சி.இராசரத்தினம்
121,02ஆம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்
தொலைபேசிஎண்:-2222459

(சி.11019)

# பொடோ சட்டம் நீங்கியது

# மாநிலங்களவை அறிவிப்பு

(புதுடில்லி)

**பொடோ சட்டத்தை ரத்துச் செய்யும் பிரேரணை மாநிலங்களவையில் வியாழக்கிழமை நிறைவேறியது. மக்களவையில் ஏற்கனவே இந்தப் பிரேரணை நிறைவேறிவிட்டது. இதன் மூலம் பொடோ சட்டம் ரத்துச் செய்யப்படுவதற்கு நாடாளுமன்றம் முறை யாக ஒப்புதல் அளித்துள்ளது.**

அதேபோல்,பொடோ சட்டத்திற்குப் பதிலாகக கொண்டு வரப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத் திருத்த பிரேரணைக்கும் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

மக்களவையைப் போலவே , மாநிலங்களவையிலும் பாரதிய ஜனதாவினர் வெளிநடப்புச் செய்தனர். அதேநேரத்தில், அ.தி.மு எதிர்த்து வாக்களித்தது. சமாஜவாதி கட்சி வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

பாரதியஜனதா சார்பில், விவாதத்தில் பேசிய முன்னாள் சட்ட அமைச்சர் அருண்ஜேட்லி தீவிரவாதத்தை எப்படி ஒடுக்குவது என்று உலக நாடுகள் விவாதித்துக கொண்டிக்கும்போது, இந்தியாவில் தீவிரவாதிகளை ஒடுக்கும் சட்டம் விலக்கிக் கொள்ளப்படுவது வேதனையளிக்கிறது என்றார். ஒக்ரோபர் 23 ஆம் திகதி பொடோ சட்டம் காலாவதியாகும் நிலையில், 32 நாட்களுக்கு முன்பு அதை ரத்துச் செய்யவேண்டிய அவசியம் ஏன்? உங்களது வாக்கு வங்கிக்கு நீங்கள் சமிக்ஞை அனுப்ப வேண்டும் என்பதால்தான் அதைச் செய் திருக் கிறீர் கள் என்று குற்றம்சாட்டினார்.


இது குறித்துப் பேசிய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல்,அரசியல் காரணங்களுக்காக பொடோ சட்டம் ரத்துச் செய்யப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்தார். கொடூரமான இந்தச் சட்டத்தை காங்கிரஸ் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வருகிறது. அப்பாவி மக்கள் பலிக்கடா ஆக்கப்படக் கூடாது என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம்; அதனால்தான் இச்சட்டத்தை ரத்துச் செய்ய முடிவெடுத்தோம். அதேநேரத்தில், தீவிரவாதத்தை ஒடுக்குவதில் எந்த விதத்திலும் பின்தங்கிவிடவில்லை. அதற்காக, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

## பாராளுமன்ற நெறிமுறைகளைப் பா.ஜ.க சிதைக்கிறது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடும் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

பாராளுமன்ற சனநாயக நெறிமுறைகளைச் சிதைக்கும் முயற்சியில் பா.ஜ.உள்ளிட்ட தே.ஜ கூட்டணியினர் ஈடுபட்டுள்ளனர் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பாக இந்திய கம்யூ.லோக்சபா தலைவர் பி.கே.வாசுதேவன் நாயர் மற்றும் துணைத் தலைவர் குருதாஸ் தாஸ் குப்தா நிருபர்களிடம் கூறுகையில், "தே.ஜ கூட்டணியினர் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்கின்றனர். ஏற்கனவே இவர்கள் ஏற்படுத்திய கூச்சல் குழப்பத்தால் கடந்த வரவுசெலவுத்திட்ட கூட்டத் தொடர் பாதிக்கப்பட்டது. தற்போதும் அதே பழக்கத்தை இவர்கள் தொடர்கின்றனர். நாட்டின் பாராளுமன்ற சனநாயக நெறிமுறைகளைச் சிதைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். பாகிஸ்தான் பாராளுமன்றம் போல நம் பாராளுமன்றத்தையும் ஆக்க நினைக்கின்றனர். " நாட்டு நலனில் அவர்களுக்கு அக்கறை இருக்குமேயானால் இந்த அரசின் மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வந்தோ அல்லது வேறு வழிகளிலோ தங்களது எதிர்ப்பைக் காட்ட வேண்டும். அதைவிடுத்து சபை நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடக் கூடாது" என்று தெரிவித்தனர்.

## மூன்று மாநில பொறுப்பாளராக குரானா நியமனம்



(புதுடில்லி)

பா.ஜ.க மூத்த தலைவரும் ராஜஸ்தான் மாநில முன்னாள் ஆளுநருமான மதன்லால் குரானா, டில்லி, பஞ்சாப் மற்றும் காஷ்மீர் மாநிலங்களுக்கான கட்சியின் மண்டலப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இத்தகவலைக் கட்சியின் துணைத்தலைவர் முக்தர் அப்பாஸ் நக்வி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

## ஐதராபாத் பொலிசிடம் ஆறு தீவிரவாதிகள் சரண்

(திருப்பதி)

மாவோயிஸ்டு நக்சலைட்டு பிரிவைச் சேர்ந்த 6 த்விரவாதிகள் ஐதராபாத்தில் பொலிஸ் டி.ஜி.பி. சுகுமாரா முன்னிலையில் சரணடைந்தனர். நக்சலைட்டுத் தலைவர்கள்,ஆதிவாசிகள் போன்ற அடித்தளத்தில் உள்ள மக்களை ஒடுக்க அவர்களில் உரிமைகளைப் பறிக்கும் நக்சலைட்டுகளின் போக்கு, பிடிக்காததால் அந்த இயக்கத்தில் இருந்து விலகி பொலிசில் சரண் அடைந்ததாகத 6 தீவிரவாதிகளும் கூறினார்கள்.

## வாஜ்பாய்,மத்தியமைச்சர்களுடன் நாகலாந்துத் தலைவர்கள் சந்திப்பு

நாகலாந்து சோஷியலிட்ஸ் கவுன்சில் (இசாக்-மொய்வாக) அமைப்புத் தலைவர்கள் நேற்று முன்தினம் டில்லியில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மற்றும் மத்திய அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினர்.

வடகிழக்குப் பகுதியில் கடந்த காலங்களில் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுவந்த தீவிரவாத அமைப்புக்கள் ஒன்றிணைந்து தேசிய நாகலாந்து சோஷியலிட்ஸ் கவுன்சில் (இசாக்-மொய்வாக) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். இதன் தலைவர்கள் இசாக் சிசிசவ்,டி.மொய்வா ஆகியோர் லண்டனில் தங்கியுள்ளனர். அங்கிருந்தபடியே நாகா இன மக்களுக்குத் தனி மாநிலம் கேட்டுப் போராடி வருகின்றனர். வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது இவர்களைப் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு அழைப்பு விடுத்தார். இதையடுத்து 36 ஆண்டுகளுக்குப் பிறகு இவர்கள் இந்தியா வந்தனர். கடந்த இரண்டு நாட்களாக இவர்கள் இரண்டு பேரும் டில்லியில் தங்கியிருந்து முக்கிய தலைவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தி வருகின்றனர். 50 ஆண்டுகளாக நீடித்துவரும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்பட மத்திய அரசும் தீவிரமாக முயன்று வருகிறது. இவர்கள் கடந்த புதன்கிழமை காங். தலைவர் சோனியாவைச் சந்தித்தனர். முன்னாள் பிரதமர் வாஜ்பாயுடன் நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் ஆலோசனை நடத்தினர். பின்னர் இசாக் மற்றும் மொய்வா கூறுகையில்; " மூத்த தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய் இந்தப் பிரச்சினையை அமைதியாகத் தீர்க்க முயற்சி மேற்கொண்டவர். அமைதிப்பேச்சுவார்த்தை சுமுகமாக நடக்கவும்,இந்தப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஏற்படவும் வழிமுறைகள் கூறும்படி அவரை நாங்கள் கேட்டுக்கொண்டோம்" என்றனர்.

பின்னர் இவர்கள் இருவரும் மததிய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, சரத்பவார், முன்னாள் பிரதமர் வி.பி.சிங்,பா.ஜ. தலைவர் அத்வானி ஆகியோரையும் சந்தித்துப் பேசினார்.

## அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மன்மோகன்சிங்கைச் சந்தித்தார்



(டில்லி)

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் நேற்று முன்தினம் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் 2 நாள் சுற்றுப் பயணமாக நேற்று முன்தினம் டில்லி வந்தார்.

நேற்று அவர் பிரதமர் மன்மோகன்சிங்கைச்சந்தித்துப் பேசினார். பரஸ்பர நல்லுறவு பாதுகாப்புத்துறையில் இந்தியாவுக்கும்,அமெரிக்காவுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவது, தீவிரவாதத்துக்கு எதிரான போரில் ஒருங்கிணைந்து செயற்படுவது ஈராக், ஆப்கானிஸ்தான் நிலவரங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து அப்போது இருவரும் ஆலோசனை நடத்தினார்கள்.

தெற்காசியாவில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலை நிறுத்த இந்தியா உறுதிபூண்டிருப்பதைக் குறிப்பிட்ட மன்மோகன்சிங்,பாகிஸ்தானுடன் அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகவும் கூறினார். ஆப்கானிஸ்தானில் அமைதியாகத் தேர்தல் நடந்திருப்பதை வரவேற்ற அவர் ஈராக்கிலும் தேர்தல் நடத்தப்படும் என்று நம்பிச்கை தெரிவித்தார். பாகிஸ்தான் வழியாக ஆப்கானிஸ்தானுக்கு பொருட்களை அனுப்ப பாகிஸ்தான் அனுமதித்தால் இந்தியா ஆப்கானிஸ்தானுக்குப் மேலும் உதவி அளிக்க முடியும் என்றும் மன்மோகன்சிங் கூறினார். ஈராக்கின் சீரமைப்புப் பணிகளுக்கும் இந்தியா உதவி அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். தீட்சித் ஆகியோரையும் ரம்ஸ்பீல்ட் சந்தித்துப் பேசினார். பின்னர் ரம்ஸ்பீல்ட் கருத்துத் தெரிவிக்கையில்;

இந்தியாவுக்கும் , அமெரிக்காவுக்கும் இடையே வலுவான உறவு உள்ளது. உலகின் மிகப்பெரிய சனநாயக நாடான இந்தியாவை முக்கியமான நாடாகக் கருதும் அமெரிக்கா அதனுடனான நட்புறவை மேம்படுத்த விரும்புகிறது. 4 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு நான் மேற்கொண்ட பயணம் பரஸ்பர நல்லுறவை மேம்படுத்த உதவியது. உறவு மேம்படுவதன் மூலம் இரு நாடுகளும் பரஸ்பர பயன்களைப் பெற முடியும்.

## சந்திரபாபு நாயுடுவின் பேச்சினால் ஆந்திர சட்ட சபையில் அமளி

(புதுடில்லி)

ஆந்திர சட்டசபையில் சபாநாயகர் பற்றி நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு கூறிய ஆட்சேபகரமான கருத்துக்களால் சபையில் அமளி ஏற்பட்டது. நாயுடு மன்னிப்புக்கேட்க வேண்டும் என முதல்வரும்,ஆளும்கட்சி எம்.எல்.ஏக்களும் வலியுறுத்தினர். ஆந்திர சட்டசபையில் நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் குறித்து இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் விவாதம் நடந்தது. கடந்த புதன் முதல்வர் ராஜசேகர ரெட்டி குறித்து சந்திரபாபு நாயுடு கூறிய சில கருத்துக்கள் சபைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டன. நேற்று விவாதம் தொடங்கியதும் எதிர்க்கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு " ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும் போது அவர்களுக்கு மைக் வசதி அளிக்கப்படுகிறது. ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது சபாநாயகர் மைக் வசதி அளிக்க மறுக்கிறார். இது குறித்து விளக்கம்பெற சபாநாயகர் அனுமதி அளிக்க வேண்டும். எனது குடும்ப உறுப்பினர்களை விமர்சித்து சபையில் பேசும போது கூட சபாநாயகர் எனக்கு உதவி அளிக்க முன் வரவில்லை" என்றார். இதனையடுத்தே அமளி ஏற்பட்டது.

## ஜெயேந்திரர் கைது விடயத்தில் ஜெயலலிதாவுக்கு தொடர்பு முன்னாள் மத்திய பிரதேச முதல்வர் உமா பாரதி



காஞ்சி பீடாதிபதி ஜெயேந்திரரைக் கைது செய்தது முதல்வர் ஜெயலலிதாவின் நோக்கமா அல்லது அவருக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தமா எனத் தெரியவில்லை என்று மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் உமாபாரதி சந்தேகம் கிளப்பியுள்ளார். கர்நாடகத்தின் பெல்லாரி மாவட்டத்தின் கிஷ்கிந்தா நகருக்குச் செல்லும் வழியில் ஹம்பி என்ற இடத்தில் அவர் நிருபர்களிடம் பேசுகையில்:-

"ஜெயேந்திரர் கைது செய்யப்பட்ட சம்பவத்தில் முதல்வர் ஜெயலலிதாவுக்கு சம்பந்தமில்லை என்று நான் கூறமாட்டேன் ஜெயேந்திரரைக் கைது செய்தது அவரது நோக்கமா அல்லது அவருக்கு ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தமா என்பது குறித்து எனக்குத் தெரியாது. ஆனாலும் ஜெயேந்திரர் கைது விஷயத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா ஆழ்ந்த மௌனம் சாதிக்கிறார். அவர் மௌனத்தை கலைத்துவிட்டு இவ்விடயத்தில் தனது கருத்தை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் ஜெயேந்திரரின் கைது விடயத்தில் நம் நாட்டுக்கு எதிரான சதி அடங்கியுள்ளது இந்து கலாச்சாரத்தை உடைத்து நொருக்குவதற்கு மத்தியில் ஆளும் ஐ.மு.கூட்டணி அரசு திட்டமிட்டு வேலை செய்கிறது. எனவே ஜெயேந்திரரின் கைது பிரச்சினையை மக்கள் கடுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.



## இறுதிப் போட்டி மழையால் பாதிப்பு
## வெற்றிக்கிண்ணம் பகிர்ந்தளிப்பு

பிறிஸ்பேனில் நேற்று நடைபெறவிருந்த நியூசிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 3ஆவதும் தொடரை யார் கைப்பற்றப்போவது எனத் தீர்மானிக்கவிருந்த ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டு வெற்றிக் கிண்ணம் இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனால் 3 போட்டிகளைக் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமன் செய்யப்பட்டது. இரு போட்டிகளிலும் இரு அணிகளும் பரபரப்பான வெற்றியைப் பெற்று சமபலத்தில் இருந்ததால் இறுதிப் போட்டி அதனை விடப் பரபரப்பாக இருந்திருக்கும் என எதிர்பார்த்தபோதும் அதனை மழை தடுத்து ரசிகர்களைப் பெரும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியாது.

## ஆண்டின் சிறந்த ஹொக்கி வீரராக அவுஸ்திரேலியாவின் ஜாமி டீயர் தெரிவு

இந்த ஆண்டுக்கான (2004) உலகின் சிறந்த ஹொக்கி வீரர் தேர்வு லாகூரில் நடந்து வரும் 'சம்பியன்' கோப்பை போட்டிக்கு மத்தியில் நடந்தது. சர்வதேச ஹொக்கி சம்மேளனம் சார்பில் நடந்த இந்த நிகழ்ச்சியில் நடந்த வாக்கெடுப்பில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜாமி டியெர் சிறந்த வீரர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறந்த இளம் வீரர் விருதை ஸ்பெயினைச் சேர்ந்த சான்டிக்கோ பெரிஸ்யா பெற்றார்.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் எனது அதீத திறமையை வெளிப்படுத்துவேன்




இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரரான மார்க்கஸ் ரெஸ்கொதிக் தென்னாபிரிக்க சுற்றுலாவின்போது தனது திறமையை வெளிப்படுத்தவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ரெஸ்கொதிக் சிறந்த துடுப்பாட்ட வீரராவார். டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றிய அவர் வெளிநாடுகளில் 26 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 32.83 சராசரியாக இருக்கும்போது உள்ளூர் போட்டிகளில் அவரின் சராசரி 28 போட்டிகளில் 53.93 ஆக உயர்ந்துள்ளது.

இது தனக்குப் பெரும் கவலையாக இருப்பதாகவும் வெளிநாடுகளில் ஏன் தனதுதிறமையைக் காட்ட முடியாது என எண்ணுவதாகத் தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வேயுடனான ஒரு நாள் போட்டிகளிலிருந்து விலகிய அவர் சகவீரர் மார்க் புச்சருடன் ஓய்வு பெறுவதுடன் பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார்..

## பதான் சிறப்பு பந்து வீச்சு; குறைந்த ஓட்டங்களுடன் சுருண்டது பங்களாதேஷ்; கும்ளே புதிய சாதனை




பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், பங்களாதேஷ் அணிக்கும் இடையில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி தனது முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது.டாக்கா மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா பங்களாதேஷை துடுப்பாட அழைத்தது.

ஆட்டத்தை ஆரம்பித்த பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சை எதிர் கொள்ள முடியாது மளமளவென விக்கெட்டுகளைக் பறிகொடுத்தது.




துடுப்பாட்டத்தில் மொகமட் அஷ்ரப்புல் ஆட்டமிழக்காது 60 ஓட்டங்களையும்,மொகமட் ரபீக் 47, றனா 24 ஓட்டங்ளையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

இர்பான் பதான் சிறப்பாகப் பந்துவீசி 5 விக்கெட்டுக்களையும் ,சஹீர் ஹான்,கும்ளே தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்,இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். .கும்ளே முதலாவது விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் டெஸ்ட்கிரிக்கெட் போட்டியில் 435 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்தார். முன்னர் இச்சாதனை (434) கபில்தேவிடம் இருந்தது.




செல்சியாவுக்கெதிரான போட்டிக்கு தகுதிபெற நடைபெறும் பிரிமியர்லீக் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் ஆர்சனல் வீரர் தியாரி கென்றி.

## ஓய்வு பெறுகிறார் மார்க் றிச்சட்சன்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான மார்க் றிச்சட்சன் சகல போட்டிகளிலும் இருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு சர்வதேசப் போட்டிகளுக்கு அறிமுகமாகிய அவர் 38 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 2776 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவரது சராசரி 44.77 ஆகும்.

இவர் இங்கிலாந்துடனான போட்டியில் ஓவல் மைதானத்தில் சதம் அடித்திருப்பினும், அண்மையில் அவுஸ்திரேலியாவுடனான போட்டி இரண்டிலும் 48 ஓட்டங்களையே பெற்றார்.


## கிம்கிளைஸ்டர்ஸ் பங்கேற்கார்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் கிம்கிளைஸ்டர்ஸ் பங்கேற்க மாட்டார். ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடர் அடுத்த மாதம் 17ஆம் திகதி மெல்போர்ன் நகரில் தொடங்குகிறது. முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்கும் இந்தத் தொடரில் இருந்து பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார். இந்தத் தகவலை அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி அமைப்பாளர்கள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

முன்னணி வீராங்கனையான கிம் கிளைஸ்டர்ஸ் மணிக்கட்டு காயம் காரணமாக மிக நீண்ட காலமாக டென்னிஸ் தொடர்களில் பங்கேற்க வில்லை. காயம் குணமடைந்து அவுஸ் ஓபனில் அவர் பங்கேற்பார் என்று எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், காயம் இன்னும் குணமாகவில்லையாம்.

## உலக சாதனையைச் சமன் செய்தார்




உலக அதிபார குத்துச் சண்டையில் 19 ST 4lb என்ற கணக்கில் விட்லி கிளிட்ஸ்கோவை வென்ற டென்னி வில்லியம்ஸ் உலக சாதனையைச் சமப்படுத்தியிருக்கிறார். வில்லியம்ஸ் இதற்கு முன்னர் மைக் டைசனை 18 ST 13 lb என்ற செட்டில் வென்றுள்ளார். இதுவே அவரது குத்துச் சண்டை வாழ்க்கையில் திறமையானதாகவிருந்தது. இதற்கு முன்பு இச்சாதனையை 1934ஆம் ஆண்டு பிரிமோ கனேரா நிகழ்த்தியிருந்தார்.31 வயதான வில்லியம்ஸ் இதனை முறியடிக்க அரும்பாடுபட்டதாகத் தெரிவித்துள்ளார்.

## கால்பந்து இல்லாமல் என்னால் உயிர்வாழ முடியாது சுப்ரதா பால்



கால்பந்து இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது ஆதலால் எந்தச் சூழலிலும் அதிலிருந்து விலக முடியாது எனத் தெரிவித்துள்ளார் மோகன் பகான் கோல் கீப்பர் சுப்ரதா பால் பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பெடரேஷன் கோப்பை போட்டியில் இவர் விளையாடிய மோகன் பகான் அணி 0-2 என்ற கணக்கில் கோவாவைச் சேர்ந்த டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் அணியிடம் தோல்வியுற்றது. 2கோல்களையும் அடித்த பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ ஜூனியர் மைதானத்திலேயே சுருண்டு விழுந்து உயிரிழந்ததற்கு, சுப்ரதா பாலின் செயற்பாடும் ஒரு காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந் நிலையில் கொல்கத்தாவில் மோகன் பகான் கிளப்பில் வியாழக்கிமை பயிற்சி மேற்கொண்ட பின்னர் குழுமியிருந்த பத்திரிகையாளர்களிடம் பால் கூறியதாவது:

"இனிமேல் கால்பந்து விளையாடமாட்டேன் என எனது தந்தை கூறினாலும், என்னால் விளையாடாமல் இருக்க முடியாது அதிலிருந்தே நான் இந்த அளவுக்கு உயர்ந்துள்ளேன். அதை எப்படி விட முடியும். எந்த ஒரு சூழலிலும் கால்பந்திலிருந்து விலகமாட்டேன் என்றார்.




மைதானத்தில் எப்போதும் முரட்டுத்தனமாகவே இருப்பதாகக் கூறுகிறார்களே எனக் கேட்டதற்கு "கோல் எல்லைக்குள் எதிராளிகள் அடிக்கும் பந்து செல்லாமலிருப்பதற்கு 100 சதவீத முயற்சியை எப்போதும் மேற்கொள்வேன். அதற்காக முடிந்த அளவிலான திறமையை வெளிப்படுத்துவேன். அதுவே நான் முரட்டுத்தனமாக ஆடுவது போல மற்றவர்களுக்குத் தெரியும்" என்றார். "ஜூனியர் இறந்தது துரதிர்ஷ்டமான நிகழ்வு. மிகவும் அதிர்ச்சியடைந்தேன் கால்பந்து வீரர் என்ற முறையில் அவருக்காக நிறைய நேரம் அழுதேன் தேசிய லீக் (என்எ.'.ப்எல்) போட்டியில் விளையாடுவதே எனதுஅடுத்த இலக்கு" என்றார் சுப்ரதா பால்.

## கோல்கீப்பரே தாக்கினார் சம்மேளனம் விளக்கம்

பெங்களூரில் நடந்த பெடரேஷன் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் (கோவா) வீரரும், பிரேசில் நாட்டைச் சேர்ந்தவருமான கிறிஸ்டியானோ ஜூனியர் 2ஆவது கோல் அடித்த சில வினாடிகளில் மைதானத்தில் விழுந்து இறந்தார்.

மோகன் பகான் கோல் கீப்பர் சுப்ரதா பால் முரட்டுத்தனமாகத் தடுத்ததால் கிறிஸ்டியானோ இறந்ததாகக் கூறப்பட்டது. பால் நீக்கப்பட்டார். இந்த நிலையில்"ஆட்டத்தின் வீடியோவை பார்க்கையில் பால், கிறிஸ்டியானோவை இடித்துத் தள்ளுவது தெளிவாகத் தெரிகின்றதுஎன விளக்கம் அளித்திருக்கின்றது.


## காரை அடித்து நொருக்கினார் மைக்டைசன் பொலிசாரால் கைது



பிரபல குத்துச்சண்டை வீரரான மைக்டைசன் ஒரு வருடமாக எந்தப் போட்டிகளிலும் ஆடாமல் உள்ளார். இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல் நகரிலுள்ள அரிசோனா எனும் இடத்தில் உள்ள ஒரு இரவு விடுதிக்குச் சென்றார்.

அங்கு உள்ளவர்களிடம் அவர் திடீரெனத் தகராறு செய்தார். பின்னர் அவர் விடுதியின் வெளியே வந்து அங்கு நின்று கொண்டிருந்த ஒரு காரை அடித்து நொருக்கினார். இதில் அந்தக் கார் பலத்த சேதம் அடைந்தது.

இது தொடர்பாகக் காரின் உரிமையாளர் பொலிசில் முறைப்பாடு கொடுத்தார். உடனே ஸ்காட்டேல் நகர் பொலிசார் டைசனைக் கைது செய்தனர். இந்தப் பிரச்சினைதொடர்பாக இன்னும் இரண்டு வாரங்களில் விசாரணை தொடரும் எனத் தெரிவித்தார். டைசன் கடந்த 1992ஆம் ஆண்டு இளம் பெண் ஒருவருடனான பாலியல் வல்லுறவு வழக்கில் மூன்று ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். 97ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் ஹோலி பீல்டின் காதைக் கடித்துப் பரபரப்பை ஏற்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## சிந்தனைக்கு

சுதந்திரம் தான் மனித வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றது; முழுமையைக் கொடுக்கின்றது

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 11-12-2004
தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அவர்கள் வேறுபட்டவர்கள் அல்ல!

சிறிலங்காப் பாராளுமன்றில் பேரினவாதக் கட்சிகள் இணைந்து விவாதங்களின்றி பிரேரணைகளை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நடத்திய போராட்டத்தினால் ஒரு மணி நேரம் பாராளுமன்றம ஒத்திவைக்கப்படவும். பின்னர் முதல் நாள் செய லுக்கு சபாநாயகர் மன்னிப்புக் கோரிய பின் சபை நடவடிக்கை தொடங்கப்பட்டது.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் தமிழ் உறுப்பினர்களின் எதிர்ப்பு, ஆட்சேபம் என்பன பொருட்படுத்தப் படாமல் இருப்பது என்பது ஒன்றும் புதிய விடயம் அல்ல. அத்தோடு சிங்களப் பெரும்பான்மைக்கட்சிகள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப நடந்து கொள்வதும் தடுத்து நிறுத்தக்கூடியதல்ல.

தமிழர் தரப்பில் இருந்து ஏதாவது எதிர்ப்போ அன்றி ஆட்சேபமோ கிளம்பும் பட்சத்தில் பெரும்பான்மை இனக்கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு விடுவதுண்டு. சில வேளைகளில் ஆளும் தரப்பின் நடவடிக்கைகளில் ஆட்சேபம் இருப்பினும் கூட எதிர்த்தரப்பினர் எதிராக வாக்களிப்பதில் இருந்து விலகிக் கொள்வது அதாவது வாக்களிப்பில் கலந்து கொள்ளாது விடுவதுண்டு. அவ்வாறு கலந்து கொள்ளாது விடுவதென்பதே ஒரு வகையில் அரசின் செயலை ஆதரிப்பது போன்றதொன்றாகும்

இந்த வகையில் பாதுகாப்புச் செலவினத்திற்காக நிதி ஒதுக்கீட்டில் எப்பொழுதுமே இவ்விரண்டு கட்சிகளும் மற்றும் பேரினவாதக்கட்சிகளும் இணைந்தே வாக்களித்து வந்துள்ளன. இதேபோன்றே ஒடுக்கு முறைச்சட்டங்களை பயங்கரவாதத் தடைச்சட்டம் , அவசரகால் சட்டம் போன்றவற்றின் அமுலாக்கங்கள் போன்றவற்றில் இவை எவ்வேளையிலும் ஒருமித்த கருத்துக் கொண்டவையாகவே இருந்துள்ளன. இதனால் பாராளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி தமிழர் தரப்பு எதிர்த்த போதும் பயனேதும் கிட்டவில்லை.

பாராளுமன்றத்தை மேடையாக்கி இனப்பிரச்சினையை சர்வதேச அரங்கிற்குக் கொண்டு செல்வோம். சிறிலங்காப் பாராளுமன்றத்தில் வாதிடுவதானால் இனப்பிரச்சினைத் தீர்விற்கு அழுத்தம் கொடுக்கப்படும் என எதிர்பாக்கைகள் அர்த்தமற்றுப்போன விடயங்களாகும். கடந்த காலத்தில் இவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையும் பயனளித்ததாக இல்லை.

இந்நிலையில் பாராளுமன்ற நடவடிக்கைகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தீவிரமாக ஈடுபடுவதும், சிங்கள அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிப்பதும் அவசியமா?, அதனால் பயன் ஏதும் உண்டா? என்ற கேள்வியும் எழுவதுண்டு. அதாவது தமிழரின் எதிர்ப்பும் ஆட்சேபமும் தொடர்ந்தும் புறந்தள்ளும் போது ஆட்சேபிப்பதில் தொடர்ந்தும் பயன் ஏதும் உண்டா? என்ற கேள்வி எழுகின்றது. ஆனால், தற்போதைய சூழ்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இத்தகைய செயற்பாடு அவசியமானதாகவே உள்ளது.

ஏனெனில் அவர்களைத் தெரிவு செய்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிய மக்களின் உணர்வுகளை அவர்கள் பிரதிபலிக்க வேண்டியது அவசியமானதாகிறது. இதற்குச் சிங்கள அரசியல் கட்சிகள் செவிமடுக்கின்றனவா? இல்லையா? என்பது வேறு விடயம். தமிழ் மக்கள் சிறிலங்கா பாராளுமன்றத்திற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பினரை இரண்டு விடயங்கள் தொடர்பாகவே தெரிவு செய்திருந்தனர்.

ஒன்று தமிழ் மக்கள் அனைவரும் தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துவது , இரண்டாவது விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான தமது ஆதரவைத் தெரிவித்தமை இவை இரண்டிற்கும் கிடைத்த ஆணையாகவே இருபத்திரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிவு உள்ளது.

ஆகையினால் தமிழ் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் அன்றி பாராளுமன்றத்தை விட்டுத் தமிழ்தேசியக் கூட்டமைப்பினர்கள் வெளியேறும் நிர்ப்பந்தம் ஏற்படும்வரை இவர்கள் தமது நடவடிக்கைகளைத் தொடருதல் வேண்டும். சிறிலங்காப் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத்தக்க வகையிலான சட்ட மசோதாக்களோ அன்றி வேறு நடவடிக்கைகளோ நிறைவேற்றப்படாது என்பதுஅனைவருக்கும் தெரிந்த விடயமே. ஆயினும் அவை எடுத்துக் கூறப்படுவதற்கு பிரசன்னம் அவசியமாக உள்ளது.

இது கடந்த காலத்தில் தமிழர் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வகித்தது போன்ற பாத்திரமல்ல. ஏனெனில் கடந்த காலத்தில் அவர்கள் எதைக் கூறினும் அது பேச்சளவிலோடு மறிக்கப்பட்டதொன்றாகிப் போனது. ஆனால் இன்று நிலைமை அவ்வாறானதல்ல. தமிழர்தரப்பு நியாயப்பாடு வெளிப்படுத்தப்படுதலுக்கு சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கூறப்படுவதற்கு இது ஒருவழி முறைமட்டுமே. அதற்கு அப்பால் தமிழர் உரிமை போராட்டத்தை நிர்ணயிக்கும் சக்தியாக தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வழிநடத்தும் விடுதலைப் போராட்டம் உள்ளது. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட முற்படும்போது அதனை எதிர்கொள்ள விடுதலைப்புலிகள் உள்ளனர்.

## பல்கலைக்கழக அனுமதி 2004/2005 இற்கான வெட்டுப்புள்ளி

| இசற் புள்ளி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா | மன்னார் | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் | கொழும்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மருத்துவம் | 1.9372 | 1.3783 | 1.3913 | 1.7742 | 1.4298 | 1.5007 | 1.7272 | 1.7539 | 1.7666 | 2.0962 |
| பல் மருத்துவம் | 1.9210 | 1.3408 | 1.3318 | 1.7643 | 1.1876 | 1.4795 | 1.7020 | 1.7023 | 1.7047 | 2.0438 |
| விலங்கு மருத்துவம் | 1.9056 | 1.2654 | 1.2303 | 1.7400 | 0.9043 | 1.4147 | 1.7013 | 1.6429 | 1.7032 | 1.9586 |
| விவசாயம் | 1.3716 | 1.0621 | 0.8599 | 1.4702 | 0.7645 | 1.0674 | 1.3538 | 1.3198 | 1.1248 | 1.4217 |
| உணவு/போசனை | 1.6240 | 0.9516 | 1.2290 | 1.6251 | 0.8581 | 1.3905 | 1.6491 | 1.5874 | 1.4547 | 1.6365 |
| உயிரியல் விஞ்ஞானம் | 1.1576 | 0.8140 | 0.7394 | 1.3636 | 0.5759 | 0.8497 | 1.1636 | 1.1943 | 1.2439 | 1.6626 |
| பிரயோக விஞ் (உயிரியல்) | 1.1011 | 0.8036 | 0.7381 | 1.3430 | 0.5505 | 0.4799 | 1.1188 | 1.1647 | 1.0745 | 1.3863 |
| பொறியியல் (MPR) | 1.8648 | 1.0318 | 1.3126 | 1.9288 | 1.0840 | 1.5307 | 1.4590 | 1.5181 | 1.6639 | 2.0947 |
| பொறியியல் (EM) | 1.8206 | 0.9413 | 1.2694 | 1.8003 | 0.0590 | 1.4921 | 1.3658 | 1.5061 | 1.5971 | 1.9002 |
| பொறியியல் (T.M) | 1.8511 | 0.9023 | 1.3004 | 1.9114 | 0.9583 | 1.5292 | 1.3843 | 1.5104 | 1.6304 | 2.0094 |
| கணிய அளவையியல் | 1.7962 | 0.8406 | 1.0593 | 1.8714 | 0.6558 | 1.4504 | 1.3936 | 1.5104 | 1.4762 | 1.8697 |
| கணினி விஞ் | 1.8194 | 0.8968 | 0.9709 | 1.7459 | 0.9370 | 1.3292 | 1.3394 | 1.4135 | 1.5280 | 1.9038 |
| பௌதீக விஞ் | 1.2934 | 0.2766 | 0.6887 | 1.1853 | 0.1878 | 0.6453 | 0.7650 | 0.7892 | 0.9697 | 1.4219 |
| பிரயோக விஞ் (Phy.Sc) | 1.2733 | 0.1560 | 0.5892 | 1.0038 | 0.4232 | 05858 | 0.7632 | 1.1139 | 0.8842 | 1.2637 |
| முகாமைத்துவம் | 1.5302 | 1.4653 | 1.5999 | 1.5924 | 1.4108 | 1.4507 | 1.3900 | 1.4469 | 1.4390 | 1.6955 |
| பெருந்தோட்ட முகாமைத்துவம் | 1.4298 | 1.4510 | 1.5684 | 1.6300 | 1.1521 | 1.6218 | 1.3714 | 1.6034 | 1.6718 | 1.6739 |
| வணிகம் | 1.4769 | 1.4602 | 1.5863 | 1.5560 | 1.2879 | 1.4263 | 1.3371 | 1.4130 | 1.4368 | 1.6350 |
| கலை | 1.3695 | 1.2767 | 1.3071 | 1.3695 | 1.1921 | 1.2977 | 1.3695 | 1.3695 | 1.3403 | 1.3114 |
| கலை (Sp) | ------- | ----- | ------ | ------- | ------ | -------- | ------ | ------- | --------- | 1.2245 |
| கலை (SAB)-A | 1.3543 | ---- | ------ | 1.3543 | ------ | --------- | 1.3543 | 1.3543 | --------- | 1.3543 |
| கட்டடக்கலை | 0.7048 | ---- | ------ | ------- | ------- | --------- | ------- | 1.4516 | -------- | 0.6152 |
| சட்டம் | 1.6930 | 1.4007 | 1.5981 | 1.8627 | 1.4365 | 1.6247 | 1.7647 | 1.7130 | --------- | 1.8593 |
| தகவல் தொழில்நுட்பம் | 1.8310 | 0.6258 | 0.9658 | 1.8624 | -------- | 1.3839 | 1.5574 | 1.4886 | ---------- | 1.9436 |
| புடைவை, தொழில்நுட்பம் | | ------ | ------- | -------- | --------- | -------- | --------- | ------ | ---------- | 0.7545 |
| முகாமைக் கற்கை (SV)-A | 1.4499 | 1.4400 | 1.5628 | 1.5465 | 1.2577 | 1.3878 | 1.3258 | 1.4049 | ---------- | 1.6024 |
| முகாமைத்துக் கற்கை (SV)B | 1.4342 | 1.4295 | 1.5330 | 1.5431 | 1.2493 | 1.3629 | 1.3496 | 1.3774 | ---------- | 1.5874 |
| நில அளவையியல் | 1.6724 | 0.8643 | 1.1634 | 1.6667 | 0.6737 | 1.3271 | 1.3161 | 1.3995 | 1.4980 | 1.6484 |
| பொதுமுகாமைத்துவம் (நிர்வாகம்) | 1.4438 | 1.5159 | 1.5201 | 1.6777 | 1.6359 | 1.6976 | 1.3000 | 1.6675 | ---------- | ---------- |
| நகரக் கிராமியத் திட்டமிடல் | 1.6925 | 1.2718 | 1.4535 | 1.6261 | 0.8700 | 1.4614 | 1.5219 | 1.7127 | ------ | 1.7507 |
| தகவல் தொடர்பாடல் | 1.7494 | ---- | 0.4676 | 1.5885 | ----- | 1.2807 | 1.4230 | 1.3894 | ________ | ________ |
| தாதியர் கற்கை | 1.7526 | 0.7585 | 0.6830 | 1.4419 | 0.4562 | 1.1306 | 1.3627 | 1.4901 | ------ | 1.7229 |
| சித்தமருத்துவம் | 0.8420 | ---- | -------- | 0.8420 | ------- | ------- | 0.8420 | 0.8420 | ------- | 0.8420 |
| உணவு விஞ்ஞானம் | 1.8107 | 1.0574 | 0.9390 | 1.6769 | 0.4702 | 1.2307 | 1.6668 | 1.5546 | -------- | 1.7863 |

## எஸ்.பி. திஸாநாயக்க மீது லஞ்ச ஊழல் வழக்குத் தாக்கல்

லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கெதிராக சட்டவிரோதமாக சொத்துச் சேகரித்த குற்றச்சாட்டின் பெயரில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கும் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் அவர் சட்ட விரோதமான வருமானத்திற்கும் கூடுதலாக 2கோடி 90 இலட்சம் ரூபாவைச் சம்பாதித்திருப்பதாக குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் தொகையை எவ்வாறு சம்பாதித்தார் என்பது பற்றி திஸாநாயக்க தகவல் தெரிவிக்கவில்லையென்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டின் பெயரில் முன்பு கைது செய்யப்பட்ட திஸாநாயக்க 25 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் ஒரு கோடி ரூபா உத்தரவாதப் பிணையிலும் பின்னர் விடுவிக்கப்பட்டும் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சேது சமுத்திரத் திட்டம் குறித்து இந்தியாவுடன் பேசவுள்ளாராம்

### -அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

சேது சமுத்திரத்திட்டத்தின் சாதக பாதக அம்சங்கள் குறித்து இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். 2 நாள் பயணமாக இந்தியா சென்ற அவர் கொழும்பு திரும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளருக்கு வழங்கிய செவ்வியில் சேது சமுத்திரத் திட்டம் குறித்து இலங்கை ஆய்வு செய்து வருவதாக தெரிவித்த அவர் இது குறித்து இந்திய அரசுடன் பேசவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் தற்போதைக்கு எந்த முடிவுக்கும் வரவில்லை எனத் தெரிவித்தார்.

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தையைத் தொடரவே விரும்புவதாகவும் போர் நிறுத்தம் அமுலில் இருக்க வேண்டும் என்றே சிறிலங்கா அரசு விரும்புவதாகவும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவாதாகவும் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் இந்திய மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்பன குறித்தும் விரைவில் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பந்துல குணவர்த்தன உரை தொடர்பாக
# பாராளுமன்றில் அமளிதுமளி

சிறிலங்கா பாராளுமன்றத்தில் நேற்று நண்பகல் ஏற்பட்ட அமளி துமளி காரணமாக சபை நடவடிக் கைகளை 10 நிமிடங்களுக்கு குழுக்களின் பிரதித் தலைவர் எம். சச்சிதானந்தன் ஒத்திவைத்துள் ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன உரையாற்றிக் கொண்டிருந்த போது, அவரது உரையை நிறைவு செய்யுமாறு குழுக்களின் பிரதித் தலைவர் வேண்டுகோள் விடுத்த போதே இந்த அமளி துமளி ஏற்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவிற்கு 30 நிமிடம் உரையாற்ற அவகாசம் வழங்கப் பட்ட போதும்; அவர் மேலும் 10 நிமிடங்களுக்கு உரையாற்றினார்.. இதனை அடுத்து பிரதிக் குழுக் களின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்த னவின் உரை முடிவடைந்ததா கவும், அடுத்ததாக உரையாற்ற இருக்கும் விமல் வீரவங்சவை உரை நிகழ்த்துமாறு அழைத்தார். ஆயினும் தமக்கு மேலும் 5 நிமிடங்கள் தேவை என்று பாரா ளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கோரிக்கை விடுத் தார். இதற்கு சபாநாயகர் ஆசனத் தில் அமர்ந்திருந்த பிரதிக் குழுக் களின் தலைவர் சச்சிதானந்தன் வாய்ப்பு வழங்காமையினால் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சபாநாயகர் ஆச னத்திற்கு சென்று எதிர்ப்பை தெரி வித்துள்ளார். இதனை அடுத்து பிரதிக் குழுக்களின் தலைவர் எம். சச்சிதானந்தன் சபையை தற்கா லிகமாக ஒத்திவைத்தார். சபை மீண்டும் சபாநாயகர் டபிள்யு. ஜே.எம்.லொக்குபண்டார தலை மையில் கூடியது. அப்போது உரையாற்றிய நிதியமைச்சர் சரத் அமுனுகம; பாராளுமன்ற உறுப்பி னர் பந்துல குணவர்த்தனவிற்கு உரையாற்ற கால அவகாசம் தேவையெனில் தமது நேரத்தை வழங்கத் தயார் என்று கூறினார். இதற்கு நன்றி தெரிவித்து பேசிய எதிர்க்கட்சியின் பிரதான அமைப் பாளர் மகிந்த சமரசிங்க அவ்வா றான தேவை இல்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவிற்கு நேரம் தேவையாக இருந்தால் அதனை எதிர்க்கட்சி வழங்கும் என்றும் கூறினார். (32)

## எஸ்.பி.திசாநாயக்க.......

தெரிவித்து அவர்களின் உத் தரவைப் பெற்றுக்கொண்ட சிறைச்சாலை அதிகாரிகள் எஸ்.பி.திசாநாயக்கவின் மனைவி தாமர திசாநாயக்க மற்றும் மகன் மரை சிறைச்சாலைக்குள் அனும திக்கவில்லை.

நீதி அமைச்சின் சட்ட நடை முறைகளின்படி ஒருமாதத்தில் ஒருமுறைதான் பார்வையிடலாம் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து, பகல் 10.45 மணி முதல் சுமார் 45 நிமி டங்கள சிறைச்சாலைக்கு வெளியே காத்திருந்துவிட்டு எஸ்.பி.திசா நாயக்க குடும்பத்தினர் வீடு திரும் பினர். நேற்று முன் தினம் காலை சிறைச்சாலைக்குச் சென்ற எஸ்.பி. திசாநாயக்கவின் சட்டத்தரணிக ளையும் உள்ளே விடவில்லை.

## கிளி....

அவர்களின் நெறியாழ் கையில் உருவாக்கப்பட்ட அம்பாறை யில் நிகழ்ந்த ஓர் உண்மைச் சம்பவத்தை சித்திரிக்கும் நாடகம் இடம்பெற்றது.

தொடர்ந்து அழகியில் கலா மன்ற மாணவர்களின் கலை நிகழ்வு கள் நடைபெற்றன. இந் நிகழ் விற்கு நீதிநிர்வாகத்துறை பொறுப் பாளர் இ.பரா, கல்விக்கழகப்பொறுப் பாளர் வெ.இளங்குமரன், மற்றும் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள்,பாடசாலை மாணவர் கள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப் பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு.ச)

## வீரச்சாவு....

சாவடைந்துள்ளார். நாட்டுப்பற் றாளர் ரவீந்திரராஜா (செல்லத் துரை-ரவீந்திரராஜா ஆதி கோவி லடி வல்வெட்டித்துறை யாழ்ப் பாணம் த.மு 6 ஆம் வட்டாரம் ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பு முல்லை) என்பவரே வீரச்சாவ டைந்தவராவார்.

11.02.1991 அன்று அம்பாறை மாவட்ட உகந்தைப் பகுதியில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். 2 ஆம் லெப்டினன்ட்-பாஸ்கரன் (சுப்பிரம ணியம்-புலேந்திரகுமாரன் பிரதான வீதி முனைத்தீவு' பெரிய போர தீவு மட்டக்களப்பு.) இவர்க ளுக்குத் தமிழீழ விடுதலைப் புலி கள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## படையினரால்.....

சனாதிபதியுடன் பேச்சுக்களை நடாத்த ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் அன்னையர் முன்னணி கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இது தொடர்பான மகஜரொன்றை சனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக அன்னையர் முன் னணி இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரியிடம் கையளித்துள்ளது. (27,33,41)

## தினக்குரல்...

இராணுவ குண்டு செயலிழக் கும் பிரிவினரின் உதவியுடன் அந்தக் கைக்குண்டை செயலிழக் கச் செய்தனர். இந்த சம்பவத்தில் கண்ணாடி வெட்டியதில் அங்கி ருந்த பெண் எழுத்தாளரொருவர் காயமடைந்துள்ளார். கடந்த புதனும் கைக்குண்டு வீச்சு இடம் பெற் றிருந்தமை தெரிந்ததே.

## அறிஞர்....

பயிற்றப்பட்டதோர் ஆசிரி யராகத் தனது தொழிலை ஆரம் பித்திருந்த சொக்கன் இலங்கை பல்கலைக்கழகத்தினில் "தமிழ் டிப்ளோமா" என அழைக்கப்படும் வித்துவான் படப்பிடிப்பையும் அக் காலப்பகுதியில் மேற்கொண்டி ருந்தார்.

அத்துடன் "ஈழத்து தமிழ் நாடகத்துறை" எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு இலங் கைப் பல்கலைக்கழகத்தனில் எம்.ஏ பட்டத்தையும் அவர் பெற்றிருந்தார். பின்னர் இவ்வாய் வுக் கட்டுரை "முத்தமிழ் வெளியீட் டுக் கழகத்தின் மூலம் அச்சிட்டு வெளிக்கொண்டு வரப்பட்ட முத லாவது நூலாகவும் அமைந்திருந் தது.

"இலக்கணம்" தொடர்பான மிக எளிய முறையிலான நூல்க ளையும் பாடசாலை மாணவர்க ளினது வசதி கருதி அவர் எழுதி யிருந்தார். ஆக்க இலக்கிய எழுத் தாளராக நாவல்கள், சிறுகதை கள், நாடகங்கள் மற்றும் பல கவி தைகளையும் அவர் எழுதியிருந் தார். இவரது "சலதி" எனும் சிறு கதை சிலப்பதிகாரத்தின் மாதவி-கோவலன் உறவினைத் தழுவிய தாக பண்டைய தமிழக பண் பாடுகளை மையப்படுத்துவதாக அமைந்திருந்ததாக விமர்சகர்கள் விமர்சித்திருந்தனர். அத்துடன் இவரால் எழுதப்பட்டிருந்த நாட கங்கள் பலவும் மேடையேற் றப்பட்டிருந்தது. அத்துடன் இலங் கை அரசின் "சாகித்ய ரத்னா விருதையும் இவர் அண்மையில் பெற்றிருந்தார். இவர் அண்மை யில் யாழ். பல்கலைக்கழகத்தால் கௌரவகலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார். (27)

## யுத்தத்திற்கான...

மக்கள் மீதான ஒடுக்கு முறை, மனித உரிமை மீறல்கள் உச்ச நிலையை அடைந்ததோ அதைத் தொடர்ந்து தான் எங்களுடைய விடுதலைப் போராட்டம் உச்ச நிலையை அடைந்தது.

உண்மையிலேயே எங்க ளுடைய தாயகப் பிரதேசத்திலே மனித உரிமை, மனித விழுமியம் மனித சுதந்திரம் மனித சமத்துவம் என்ற அனைத்தும் உட்பட்ட ஒரு உன்னதமான தமிழீழ தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற எங்களுடைய தேசியத் தலைவ ருடைய அவாவுக்கிணங்க வடக்கு- கிழக்கு மனித உரிமைச் செயலகம் இன்று பெரும் பணியாற்றத் தொடங்கி இருக் கின்றது. இச்செயலகம் தொடங்கி மிகக் குறுகிய காலத்திற்குள் மிகவும் சிறப்பாக செயற்பட்டு சர்வதேச அளவிலும் எமது தாயகப் பிரதேசத்திலும் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதை நாங்கள் எல்லோரும் அறிவோம். அண்மையிலே நாங்கள் ஜெனிவாவிலே எங்கள் சட்ட வல்லுனர்களுடனான அரசி யல் அமைப்பு விவகாரக் குழுவி னருடனான மாநாட்டை நடாத்திக் கொண்டிருந்த வேளையில் ஜெனிவா நகரிலே எங்களுடைய வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகம் மற்றும் மனித உரிமை வாதிகள் எல்லோரும் ஒன்று கூடி ஒரு மாநாட்டை நடாத்தினார்கள். அதிலே கலந்து கொள்கின்ற சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது அங்கே அது சர்வதேச சமூகத் தாலும், அங்கேயுள்ள சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்க ளாலும் மிகவும் முக்கியத்துவப் படுத்தப்பட்டு ஆவலோடும், ஆர்வத்தோடும் வந்து கலந்து கொண்டு இவர்களோடு உறவாடி யதை நான் அங்கு அறிந்தேன். அந்த ரீதியாக எங்களுடைய மனித உரிமைச் செயலகத்தி னுடைய செயற்பாடுகள் மிகவும் காத்திரமானதும், மிகவும் உறுதி யானதும் அதிலே செயற்படுகின்ற எங்களுடைய அங்கத்தவர்கள் அனைவருமே மிகவும் காத்திர மானவர்கள், சமூகப்பற்றுணர் வுள்ளவர்கள். எங்களுடைய மக்க ளின் சுய உரிமைகள் சம்பந் தமான சேவைகளை ஆற்றக் கூடிய வலுவும், ஆற்றலும், ஆளு மையும் மிக்கவர்கள் என்பதை அங்கே காணக்கூடியதாக இருந் தது.

இது வரை காலமாக தமிழ் மக்களின் மனித உரிமைகள் பற்றிப் பேசுவதென்பது உண்மை யிலேயே மிகவும் குறைவு. இந்த இலங்கைத் தீவிலே மிகக் கொடு ரமான அநீதிகளுக்கு உள்ளாக்கப் பட்டவர்கள் என்ற ரீதியில் தமிழ் மக்கள் மிகுந்த வேதனைப்பட் டார்கள். தமிழ் மக்கள் தான் மிகக் கொடூரமான மனித உரிமை மீறல் களுக்கு உட்படுத்தப்பட்டவர்கள். ஆனால், இந்த தமிழ் மக்கள் சார்பாக் எங்களுடைய மக்க ளுக்கு நடைபெறுகின்ற இந்த அநீதிகளுக்கு எதிராக, இந்த அநீதிகளை வெளியில் கொண்டு வருவதற்கு எங்களிடம் உள்ள மனித உரிமைவாதிகளுடைய செயற்பாடுகளை முன்னெடுப் பதற்கு எவருமே முன் வராத நிலை இருந்தது. அந்த நிலையில் தெற்கிலே சிங்கள தேசம், அரச பயங்கரவாதம் எங்களுடைய மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட் டிருக்கின்ற மனித உரிமை மீறல் களை மூடி மறைப்பதற்கு இங்கே மனித உரிமைகளை எடுத்துச் சொல்வதற்கான மனித உரிமைவாதிகள் என்று தங்க ளினால் இனங்காணப்பட்டவர் களை தேர்ந்தெடுத்து அவர்க ளுக்கு அரசாங்க ஊதியம் அரசாங்கச் சலுகைகளை வழங்கி அவர்களுக்கு சர்வதேச அள விலே பிரபல்யத்தைக் கொடுத்து பதவிகளும் புகழும் அதிகாரத் தையும் கொடுத்து அவர்கள் உள்வாங்கப்பட்டு அவர்களுக் கூடாகத்தான் இங்கே மனித உரி மைகள் பற்றி பேசப்பட்டது. இன்று எங்களுடைய விடுதலைப் போராட்டம் எங்களுடைய அடிப் படை உரிமைகளை பெறுவதற் கான போராட்டம் இந்தப் போராட்டம் எமது தேசியத் தலைவரின் தலைமையிலே மிக உயர்ந்த வளர்ச்சியை அடைந்த நிலையில் மத குருமார்கள் கல்வி யியலாளர்கள் சமூகப் பற்றாளர் கள் அனைவரும் ஒன்று பட்டு எமது தேசத்திலும் ஒரு மனித உரிமை செயற்பாட்டுக் குழுவை அமைத்திருக்கின்றார்கள். எமது மக்கள் மீது பல்வேறு கொடுமை களைத் திணித்த மனித உரிமை மீறல்கள் நடைபெற்ற போதும் சிறிலங்கா அரசாங்கம் அவற்றை மூடி மறைத்து வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் உரிமைக்காக போராடுகின்ற விடுதலை அமைப்பு பற்றிய சர்வதேச அளவிலான மனித உரிமை மீறல் பிரச்சாரங்களைபொய்யான குற்றச்சாட்டுக்களை பொய்யான பரப்புரைகளை செய்து சர்வதேச அளவில் எமது விடுதலைப் போராட்டத்தை, தமிழருடைய உரி மைப் போராட்டத்தை கொச் சைப்படுத்த முயன்றது. ஆனால் இவற்றையொல்லாம் முறியடித் துக்கொண்டு எங்களுடைய விடுதலைப்போராட்டம் வீறு நடை போட்டு இன்று உயர் வளர்ச் சியை அடைந்திருக்கின்றது.

இந்த மனித உரிமைகள் செய லகம் தொடங்கப்பட்ட நாளிலி ருந்து இங்கே உள்ள நிர்வாக அமைப்புகள் எங்களுடைய கட்ட மைப்புகள் அனைத்துமே அவர்க ளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி அவர்களை உற்சாகப் படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் நாங்கள் இனி எங்களு டைய பிரச்சினைகளை வெளி உலகிற்கு எடுத்துக்காட்ட முடியும். ஏனெனில் இன்று எங்கள் மக்கள் மீது மிகக்கொடூரமான மனித உரிமை மீறல்களையும் அரச பயங்கரவாதத்தையும் ஏவிவிட்டு எங்களுடைய மக்களின் அடிப் படை உரிமைகள் அனைத்துமே பறிக்கப்பட்டு நாங்கள் மிகவும் கேவலமான நெருக்கடியான அவ லமான வாழ்க்கை நிலையில் நின்றுகொண்டிருந்த பொழுதும் எங்கள் மீதான இந்தப் பாரிய மனித உரிமை மீறலைப்பற்றிய பிரச்சினையைச் சர்வதேச அளவில் கொண்டு செல்வதற்கு எவரும் துணியவில்லை. ஆனால் அதைச் செயற்படுத்தியவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இலங்கை அரசினுடைய திட்ட மிட்ட முறையில் உருவாக்கப்பட்ட மனித உரிமைவாதிகளால் தான் அங்கே சிறிய அளவில் கொண்டு செல்லப்பட்டது. ஆனால் அதை மூடி மறைத்து அரச பயங்கர வாதமும் தமிழர் தாயகத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் மனித உரிமைகளைப் பேணுகின்ற ஒரு கோட்பாட்டை கொண்ட ஒரு சிறந்த ஆட்சி முறைமையை இன்று நாங்கள் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றோம். நீதித் துறை, காவல்துறை போன்ற பல கட்டுமானங்கள் எங்களுடைய தேசத்திலே மிகச்சிறப்பாக செயற் பட்டுக்கொண்டிருக்கின்றன. சமா தான உடன்படிக்கையிலே மிக முக்கியமாக மக்களுடைய இருப் பிடங்களிலே இருந்து இராணுவம் விலகி மக்களைக் குடியமரச் செய்ய வேண்டும் என்பதுதான். இதற்குக் காலவரையறையும் விதிக்கப்பட்டது. ஆனால் இதை அரசோ படைகளோ மதித்து நடக் கவில்லை. ஆறு கட்டப்பேச்சுக் களில் எதையுமே அரசு கவனத் தில் எடுக்கவில்லை. இதனால் பேச்சுக்கள் முடக்கப்பட்டது. இதனையடுத்து இடைக்கால நிர் வாகக் கட்டமைப்புத் தொடர்பாக இலங்கையின் ஆலோசனை எமது மக்களின் தேவையை நிறைவேற்ற முடியாததாக இருந் ததால் நாங்கள் ஒரு வரைவை முன்வைத்தோம். இதற்குப் பொதுத்தேர்தல் மூலம் மக்கள் அங்கீகாரம் வழங்கினார்கள். இதனை அரசு கொச்சைப்படுத் தும் வகையிலும் பேச்சுக்களை நிறுத்தும் வகையிலும் மீண்டும் யுத்தத்திற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதிலேயே முழு அள வில் தீவிரமாகச் செயற் பட்டுக்கொண்டிருக்கிறது. மீண் டும் எமது தேசத்தின் மீது யுத்தத் தைத் திணிப்பதற்கான முயற்சி தான் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் எங்கள் தலைவர் மீண் டும் அரசாங்கத்திற்கு ஒரு காலக் கெடுவைக் கொடுத்திருக்கின்றார். பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க வருமாறு. எனவே இந்த கால கட்டத்தில் எமது மக்களின் பிரச் சினைகளை உலகிற்குக் கொண்டு வர முன்வந்திருக்கும் இந்த மனித உரிமை அமைப்பு மிகவும் பாராட்டுக்குரியதே என்றார். (ச,கு)

# சாவு அறிவித்தல்

## அமரர் முருகேசன் எழிலரசி

வீ.எம். றோட் பருத்தித்துறையைச் சேர்ந்த முருகேசன் எழிலரசி 09.12.2004 (வியாழன்) அகால மரணம் அடைந்துள்ளார். அன்னார் காலம் சென்ற முருகேசன், புனிதரத்தினம் ஆகியோரின் பாசமிகு மகளும், இளவரசி, உதயணன் (சுவிஸ்), குமணன் (சுவிஸ்), லச்சுமணன் (லண்டன்), இளவதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஐங்கரதாஸ்,குணசேகரன்,சுந்தரி ஆகியோரின் மைத்துனியும் ஆவர். அன்னாரின் அவரது இல்லத்தில் இறுதிக் கிரியைகள் 12.12.2004 ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணிக்கு இடம்பெறும் என அறியத் தருகின்றனர். இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முகவரி,**
**வீ.எம்.றோட்,**
**பருத்தித்துறை,**
**யாழ்ப்பாணம்.**

(சி.11018)

**தகவல்:**
**நா.குணசேகரன்**
**(மைத்துனர்)**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.